# சங்கீத யோகம்

கல்கி
(கர்நாடகம்)

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

வானதி முதற் பதிப்பு : டிசம்பர் 1998

அமரர் கல்கி நூற்றாண்டு விழா வெளியீடு

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 50.00

- TITLE : SANGEETHA YOGAM
- AUTHOR : KALKI
- LANGUAGE : TAMIL
- SUBJECT : ESSAYS
- EDITION : FIRST EDITION, DECEMBER, 1998
- TOTAL PAGES : 28 + 186 = 214
- PUBLISHED BY : VANATHI PATHIPPAKAM
  13, Deenadayalu Street,
  Thyagaraya Nagar, Chennai – 17.
- PRICE : Rs. 50.00

Laser Typeset at : Sivasakthi Laser Printers, Chennai – 41
Printed at : Malar Printers, Chennai – 34.

# பதிப்புரை

50 ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த நூல் இது. நூல்வெளியீட்டுத் துறையில் என்னுடைய குரு, வழிகாட்டி; எல்லாமாகவும் விளங்கிய சின்ன அண்ணாமலை நடத்திய 'அறிவுப்பண்ணை'யான தமிழ்ப்பண்ணை வெளியீடாக 1947இல் வெளியான நூல் 'சங்கீத யோகம்'.

இது ஒன்றும் நாவலோ, சிறுகதைகளோ இல்லை. அவ்வப்போது நடைபெற்ற சங்கீதம் தொடர்பான நிகழ்ச்சிகளின் விமர்சனக் கட்டுரைகள்தாம் இவை! முக்கியமாகத் 'தமிழிசை' வேண்டும் என்று போராட வேண்டியிருந்த ஒரு காலகட்டத்தில் 'கர்நாடகம்' என்கிற பெயரில் கல்கி அவர்கள் எழுதிய கட்டுரைகள்.

50 ஆண்டுகள் கடந்த பின்னரும், இப்போதும் ரசிக்கும்படியாக, பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திக்க வைக்கும்படியாக இந்தக் கட்டுரைகள் அமைந்திருப்பது ஓர் அற்புதந்தான்!

குற்றாலத் தண்சாரலில் இருந்து கொண்டு அமரர் கல்கி அவர்கள் எழுதியுள்ள முன்னுரை இந்நூலின் இலக்கியத்தரத்தை மேலும் கூடுதலாக்குகிறது. அவ்வாறே, மூதறிஞர் ராஜாஜி அவர்கள் 'தமிழ்ப் பாட்டு இயக்கம்' பற்றி எழுதிய கருத்துக்களும் முத்தாய்ப்பாக இடம் பெறுகின்றன.

சங்கீத வித்வான்களின் அழகான படங்களோடு, இந்த நூலையே ஒரு 'யோகமாக' நினைத்து வெளியிட்டார் சின்ன அண்ணாமலை. 'சங்கப்பலகை' என்கிற தலைப்பில் தமக்கேயுரிய நகைச்சுவையுணர்வு மிளிர ஒரு பதிப்புரையையும் எழுதினார். அதுவும் இத்தொகுப்பில் அப்படியே இடம்பெறுகின்றது.

அமரர் கல்கி அவர்களின் நூற்றாண்டு விழாவை மிகவும் உற்சாகத்தோடு கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். தொலைக்காட்சிப் பேட்டிகள், மாதாந்திரக் கூட்டங்கள், கருத்தரங்குகள் என்று பலமுனைகளிலும் 'கல்கி' சிறப்பிடம் பெற்றுக் கொண்டிருக்கிறார். வானதி பதிப்பகம், இந்த 'சங்கீத யோகம்' நூலை நிறையப் படங்களோடு நூற்றாண்டு விழாச் சிறப்பு வெளியீடாகக் கொண்டு வருவதில் மிகவும் பெருமிதம் அடைகிறது.

பல ஆண்டுகளாகக் கிடைக்காமல் இருந்த இந்த 'சங்கீத யோகம்' நூலைத் தமிழிலும், தமிழிசையிலும் பேரன்பு கொண்ட வாசகர்களும் வித்வான்களும், தமிழன்பர்களும் பெரிதும் விரும்பி வரவேற்பார்கள் என்பதில் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு.

Chennai - 17
Date : 20-11-98

வானதி திருநாவுக்கரசு

# ஆசிரியர் முகவுரை

தமிழ்ப் பண்ணை ஸ்ரீ சின்ன அண்ணாமலை அவர்கள் முதன் முதலில் என்னிடம் "சங்கீத யோகம்" என்று குறிப்பிட்டபோது வீணை பவானியைப் போலச் சங்கீத யோகமும் ஒரு கதாநாயகி என்று நினைத்தேன்.

பிறகு சங்கீத யோகம் ஒரு கட்டுரையின் தலைப்பு என்று அறிந்ததும் சிறிது ஏமாற்றம் உண்டாயிற்று. படித்துப் பார்த்ததும் தமிழிசை இயக்கத்தைப் பற்றி நான் எழுதிய கட்டுரைதான் என்று தெரிந்து கொண்டேன்.

"சங்கீத யோகம் முதலிய தமிழிசை இயக்கக் கட்டுரைகளை ஒரு புத்தகமாகப் போட்டால் என்ன?" என்று சின்ன அண்ணாமலை ஒரு போடு போட்டார்.

"போட்டால் என்ன? போடலாம்! அதனால் பூகம்பமோ யுகப் புரட்சியோ ஏற்பட்டு விடாது. ஆனால் எதற்காகப் போடவேண்டும்?" என்று கேட்டேன்.

"உலகப் புரட்சியையும் மூன்றாவது உலக மகா யுத்தத்தையும் தடுப்பதற்காகத்தான்!" என்று சொன்னார் சின்ன அண்ணாமலை.

"சங்கீத யோகத்துக்கும் உலகப் புரட்சிக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டேன்.

"அது என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? அச்சகத் தொழிலாளர்களுக்கு வேலையில்லாமற் போனால் அவர்கள் ஸ்ட்ரைக் செய்வார்கள். அதன் மூலம் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்குப் பெருகும்; உலகப் புரட்சி ஏற்படும்; ருஷ்யாவின் தலையில் அமெரிக்கர்கள்

அணுகுண்டைப் போடுவார்கள்; மூன்றாவது உலக மகாயுத்தம் ஆரம்பமாகும். இதை எல்லாம் தடுப்பதற்காகத் தான் சொல்கிறேன். சங்கீத யோகத்தைப் புத்தகமாகப் போட்டால் அச்சகத் தொழிலாளிகள் சிலருக்கு வேலை கிடைக்குமல்லவா? அதனால் அவர்கள் ஸ்ட்ரைக் செய்யாமல் இருப்பார்கள் அல்லவா? அதன் மூலம் உலகப் புரட்சி ஏற்படாமல் தடுக்கலாமல்லவா?'' என்றார் சின்ன அண்ணாமலை.

"ரொம்ப சரி; அப்படியானால் அவசியம் சங்கீத யோகத்தைப் போடுங்கள்! உலகப் புரட்சியின் தலையிலேயே அதைப் போட்டு விடுங்கள்!'' என்றேன்.

* * * * *

புத்தகத்துக்குள்ளே பக்கங்களைப் புரட்டிப் பார்த்த போது, எல்லாம் நான் எழுதிய கட்டுரைகளேயென்றாலும், ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியமாக ஏற்பட்டுக் கொண் டிருந்தது. 'தமிழிலேயே பாடவேண்டும் என்று சொல்வதற்கு ஒரு இயக்கமா? அதற்கு இவ்வளவு எதிர்ப்பா? அந்த எதிர்ப்பைச் சமாளிக்க இவ்வளவு சப்பைக் கட்டா?' என்று ஒரே வியப்பாயிருந்தது.

இந்த மாதிரி ஆச்சரியங்களை யெல்லாம் நமது அருமைச் செந்தமிழ் நாட்டிலேதான் காணமுடியும் என்ற எண்ணத்தினால் தோள்கள் பூரித்து உயர்ந்தன!

* * * * *

சின்ன அண்ணாமலை அவர்களின் பிடிவாதத் தினால் புத்தகம் என்னமோ வெளியாகப் போகிறது. அதற்கு ஒரு முகவுரை எழுதவும் ஒப்புக் கொண்டு விட்டேன். எனவே தமிழிசை இயக்கத்தின் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றைக் குறித்து எனக்குத் தெரிந்த சில



உண்மைகளை இங்கே சொல்லி வைக்கலாம் என்று எண்ணுகிறேன்.

மூன்று நாலு வருஷங்களுக்கு முன்னால் தமிழிசை இயக்கத்துக்கு எதிர்ப்புப் பலமாயிருந்தபோது, சில நண்பர்கள், முக்கியமாகக் காங்கிரஸ்வாதிகளான தேசபக்த நண்பர்கள், என்னை ஒரு முக்கியமான வாதத்தைச் சொல்லிப் பலமாகத் தாக்குவதுண்டு.

"ராஜா ஸர்'' அண்ணாமலைச் செட்டியாரும், ஸர் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரும் ஆரம்பித்து நடத்தும் தமிழிசை இயக்கத்தை நீர் எப்படி ஆதரிக்கலாம்?'' என்று ஆத்திரத்துடன் கேட்பார்கள்.

"ஏன் ஆதரிக்கக் கூடாது?'' என்று கேட்டால், "இது என்ன கேள்வி? அவர்கள் இருவரும் பட்டதாரிகள்; பிரிட்டிஷ் சர்க்காரை ஆதரிப்பவர்கள்'' என்பார்கள்.

அவர்களுக்கு நான் "ஸ்ரீ ஈ. வே. ராமசாமிப் பெரியார் அவர்களின் ஆலய ஒழிப்புக் கொள்கை எனக்குப் பிடிக்கவில்லை. அதன் பொருட்டு ஸ்ரீ நாயக்கர் அவர்கள் தமிழ் பேசுகிறாரே என்று நான் தமிழ் பேசாமல் இருக்க முடியுமா? டாக்டர் அம்பேத்கருடைய அரசியல் போக்கு எனக்குப் பிடிக்கவில்லைதான். அதை முன்னிட்டு, டாக்டர் அம்பேத்கர் நிறையப் புத்தகங்கள் வைத்திருப்ப தால் என்னிடமுள்ள புத்தகங்களை யெல்லாம் நான் கொளுத்தி விட வேண்டுமா? ஸர். ஸி. பி. சாமஸ்வாமி ஐயர் அவர்கள் ஒரு பட்டதாரி; அவருடைய சுதேச சமஸ்தானக் கொள்கை எனக்குக் கட்டோடு பிடிக்க வில்லை. அவர் நல்ல சங்கீத ரசிகராயிற்றே என்பதற்காக நான் சங்கீதமே கேட்காமலிருக்க வேண்டுமா?'' என்று பதில் சொல்வேன்.

என்ன சொன்னாலும் தமிழிசை இயக்கத்தை எதிர்த்தவர்களை என்னால் மாற்ற முடியவில்லை; என்னையும் அவர்களால் மாற்ற முடியவில்லை.

உண்மையில், ஒரு விஷயத்தில் பிடிவாதம் ஏற்பட்டுவிட்டால் வாதத்தின் மூலம் அதை மாற்றுவது என்பது அநேகமாக இயலாத காரியம் என்றே சொல்லலாம். மனிதவர்க்கத்தின் சுபாவமே இதுவாகும். ஆனால், தப்பபிப்பிராயங்களை வைத்துக் கொண்டு ஒரு நல்ல இயக்கத்தை எதிர்ப்பவர்களை அந்தத் தப்பபிப்பிராயங்களை நிவர்த்திப்பதின் மூலம் சில சமயம் மாற்றக் கூடும். தமிழ் இசை இயக்கத்தைப் பற்றிய ஒரு முக்கியமான தப்பபிப்பிராயம் என்னவென்றால், அந்த இயக்கத்தை ஆரம்பித்தவர்கள் செட்டி நாட்டு ராஜாவும் ஸர் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரும் என்பதுதான்.

என்னைப் பற்றிய வரையில், மேற்படி பிரமுகர்களே அந்த இயக்கத்தை ஆரம்பித்திருந்த போதிலும் அதில் நான் உற்சாகமாகக் கலந்து கொண்டுதானிருப்பேன்.

**"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"**

என்று தமிழ்மறை கூறுகிறது. இந்தக் குறளில் கண்ட உண்மையைக் கூடிய வரையில் கடைப்பிடிக்க முயன்று வந்திருக்கிறேன். வேண்டியவர் சொன்னாலும் வேண்டாதவர் சொன்னாலும் உயர்ந்தவர் சொன்னாலும் பாமரர் சொன்னாலும் அவர்கள் சொல்வதில் உண்மை இருக்கிறது என்று பட்டால் அதை ஒப்புக் கொள்வதில் எனக்குச் சிறிதும் தயக்கம் ஏற்படுவதில்லை. என்னுடைய கொள்கை தவறு என்று தெரிந்து கொண்டால் அதைத் திருத்திக்கொள்வதற்கும் நான் தயங்குவதில்லை.

ஆனால் தமிழிசை இயக்கத்தைப் பற்றிய வரையில், அந்த ஆரம்பித்த பொறுப்பை ராஜா ஸர் அல்லது ஸர் ஆர். கே. அவர்களின் மீது சுமத்துவது சரியல்ல என்பதை அவசியம் நான் சொல்லியாக வேண்டும்.



உண்மையில் தமிழிசை இயக்கத்தை ஆரம்பித்து, அதற்கு அஸ்திவாரம் போட்டு, திறப்பு விழாவும் நடத்தியவர் ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள்தான். தமிழ்நாட்டில் சென்ற பதினைந்து ஆண்டுகளில் தமிழ்ப் பற்று வளர்ந்து பெருகுவதற்கும், உண்மைக் கவிதை உணர்ச்சி பரவுவதற்கும், தமிழகத்தின் பழம் பெரும் செல்வமான பரதநாட்டியக் கலை புத்துயிர் பெறுவதற்கும் ஸ்ரீ டி. கே. சிதம்பரநாதமுதலியார் எப்படிப் பொறுப்பாளியோ அதுபோலவே தமிழிசை இயக்கத்துக்கும் அவரே பொறுப்பாளி யாவர். அந்தப் பொறுப்பை ஸ்ரீ டி. கே. சி. அவர்களே தட்டிக் கழித்து வேறு யார் பேரிலாவது போடப் பார்த்தாலும் அதை நான் ஒப்புக் கொள்ள முடியாது.

சுமார் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னால் முதன் முதலில் டி. கே. சி. அவர்களை நான் சந்தித்த போது அவர் சிறந்த சங்கீத ரசிகர் என்பதைக் கண்டேன். கச்சேரிகளுக்கும் காலட்சேபங்களுக்கும் போவதென்றால் அவருக்கு ரொம்ப ஆசை. ஆனால் கச்சேரிகளுக்கும் காலட்சேபங்களுக்கும் போகும்போது சந்தோஷமாய்ப் போகிறவர் திரும்பி வரும்போது எரிச்சலோடு திரும்பி வருவார்.

"எல்லோருக்கும் தெரிந்த தமிழ் பாஷையிலே பாட்டு இல்லையா? பாடக்கூடாதா? தெரியாத பாஷையிலே பாடுவதிலும் கேட்பதிலும் நம்மவர்களுக்கு எவ்வளவு மோகம்?" என்று ஆத்திரத்தோடு சொல்வார். பக்கத்திலிருப்பவர்கள் பேசாமல் இருந்தால், "ஏன் சும்மா இருக்கிறீர்கள்? நீங்கள் ஊமையா, செவிடா? அல்லது உங்களுக்கும் தெரியாத பாஷையிலேதான் மோகமா?" என்று சண்டை பிடிப்பார். சங்கீதம், கலை சம்பந்தமான

எந்தச் சபையில் அல்லது கூட்டத்தில் அவர் பேசினாலும் இந்த விஷயத்தைப் பற்றிப் பேசாமலிருப்பதில்லை.

"நமது சங்கீதக் கச்சேரிகளில் தமிழ்ப் பாட்டுக்களை அதிகமாய்ப் பாடினால்தான் நாட்டில் சங்கீத ஞானம் நன்கு பரவும்; மேலும் மேலும் அதிகமான ஜனங்கள் நல்ல சங்கீதத்தைக் கேட்டு அனுபவிப்பார்கள்'' என்றும், "பொருள் தெரிந்து உணர்ச்சியோடு அனுபவித்துப் பாடுவதுதான் உயர்ந்த பாவ சங்கீதம்; மற்றதெல்லாம் 'ஐயோ! பாவம்!' என்று இரக்கப்பட வேண்டிய காரியந் தான்!'' என்றும் டி. கே. சி. அவர்கள் சொல்லாத கூழாம் இல்லை; அவ்விதம் பேசாத கூட்டம் இல்லை.

உண்மையில் இந்தச் சங்கீத விஷயத்தில் அந்த நாளில் டி. கே. சி அவர்களைப் போல் எனக்கு அவ்வளவு ஆத்திரம் இருக்கவில்லை யென்பதை ஒத்துக்கொள்கிறேன். சிறு பிராயத்திலிருந்து தியாகராஜர், தீக்ஷிதர் கீர்த்தனங் களையே கேட்டுக் கேட்டுப் பழகியிருந்தேன். அதோடு ஸாஹித்யத்திலே கவனம் செலுத்தாமல், ஏதோ வாத்தியக் கச்சேரி கேட்பதுபோல் ஒரு காதால் பாட்டைக் கேட்டுக் கொண்டும், இன்னொரு காதால் பக்கத்திலுள்ளவரின் வம்புப் பேச்சைக் கேட்டுக் கொண்டும் நாலு மணி நேரம் உட்கார்ந்திருக்கவும் பழகியிருந்தேன்.

**"ஸரஸ ஸாம தான பேத தண்ட சதுரா!''**

என்னும் கீர்த்தனப் பல்லவியை, "ஸரஸா—மதனா!'' என்றே கேட்டுக் கேட்டு, இது ஏதோ மன்மதனைப் பற்றிய பாடல் என்று வெகு காலம் எண்ணிக் கொண்டிருந்தேன் என்றால், பார்த்துக் கொள்ளுங்கள்!

டி. கே. சி. அவர்களுடைய பழக்கத்துக்குப் பிறகு சங்கீதக் கலை சம்பந்தமான அவருடைய அபிப்பிராயத் தில் பெரிதும் உண்மை யிருக்கிறதென்று உணர்ந்தேன். அவர் சொல்வது நியாயமான தென்றும் நன்மையான



தென்றும் நிச்சயம் உண்டான பிறகு, ஒத்துக்கு மத்தளமாக நானும் டி. கே. சி. அவர்களின் கட்சியை ஓரளவு ஆதரித்துப் பேசவும் எழுதவும் ஆரம்பித்தேன்.

இது விஷயத்தில் எனக்கு ஊக்கமும் உறுதியும் ஏற்படுவதற்குத் தமிழ்நாட்டின் அரும் பெரும் தேசியத் தலைவர்கள் மூன்று பேரின் அபிப்பிராயம் துணையா யிருந்தன.

அந்த மூவரும் மகாகவி பாரதியார் தீரர் சத்திய மூர்த்தி, தலைவர் ராஜாஜி ஆகியவர்கள்தான்.

* * * * *

நமது தேசிய மகாகவி வெகு காலத்திற்கு முன்பே "கலைகள்'' என்னும் கட்டுரையில் பின்வருமாறு எழுதி இருப்பதை அறிந்து கொண்டேன்:—

"வித்வான்கள் பழைய கீர்த்தனங்களைப் பாடம் பண்ணிப் புராதன வழிகளைத் தெரிந்து கொள்ளுதல் அவசியம். ஆனால் **தமிழ்ச் சபைகளிலே எப்போதும் அர்த்தம் தெரியாத பிற பாஷைகளில் பழம் பாட்டுகளை மீட்டும் மீட்டும் பாடுதல் நியாயமில்லை. அதனால் நமது ஜாதி சங்கீத ஞானத்தை இழந்து போகும்படி நேரிடும்.''***

எத்தனையோ காரியங்களில் ஸ்ரீ பாரதியார் தீர்க்க தரிசனத்துடன் அபிப்பிராயம் சொல்லியிருப்பது போலவே சங்கீதக் கலை விஷயத்திலும் சொல்லியிருக்கிறார். மேற்கண்ட இரண்டே வாக்கியங்களில் தமிழிசை இயக்கத் தின் அவசியத்தை அற்புதமாக வற்புறுத்தியிருக்கிறார். பிற பாஷைப் பாட்டுக்களையே பாடிக்கொண்டிருந்தால் தமிழ்

---

* பாரதியார் நூல்கள்; பகுதி 19; பக்கம் 120.

ஜாதி சங்கீத ஞானத்தையே இழந்து விடுமென்று சாபங் கொடுப்பதைப்போல் அழுத்தமாகக் கூறியிருக்கிறார்.

தீரர் சத்தியமூர்த்தி அவர்கள் தமிழிசைக்குச் சாதகமான அபிப்பிராயம் உடையவர் என்பது ஒரு நாள் தற்செயலாக எனக்குத் தெரிய வந்தது.

ஸ்ரீ டி. கே. சி. அவர்களும் நானும் ஒரு இளம் சங்கீத வித்வானின் பாட்டுக் கச்சேரிக்குப் போயிருந்தோம். ஸ்ரீ சத்தியமூர்த்தியும் அந்தக் கச்சேரிக்கு விஜயம் செய்திருந்தார். கச்சேரி முடியும் சமயத்தில் சபை நிர்வாகிகள் ஸ்ரீ சத்தியமூர்த்தியைப் பேசும்படி கேட்டுக் கொண்டார்கள். எந்தச் சபையிலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் வெண்கலக் கடையில் யானை புகுந்ததுபோல் கண கணவென்று காதில் ஒலித்துக் கொண்டிருக்கும்படி பேசக் கூடியவரான ஸ்ரீ சத்தியமூர்த்தி உடனே பேச எழுந்தார்; சக்கைப் போடு போட்டார். கடைசியில் சபையோரைத் தூக்கிவாரிப் போடும்படியாக ஒரு விஷயமும் சொன்னார்: "நமது வித்வான்கள் தமிழ்ப் பாட்டுக்களை அதிகமாகப் பாட வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. பொருள் தெரிந்த தாய்மொழியில் பாட்டுக்களைக் கேட்கும்போது தான் எனக்குப் பரிபூரண ஆனந்தம் ஏற்படுகிறது— இதை இங்கே டி. கே. சி. யும், 'கல்கி'யும் வந்திருப்பதற்காக நான் சொல்லவில்லை!'' என்றதும் சபையில் ஒரே கரகோஷம் உண்டாயிற்று. இது 1937-ம் வருஷத்தில் நடந்த சம்பவம். அதற்கு முன்னாலேயே நாங்கள் இருவரும் இந்த விஷயத்தைச் சொல்லிக் கொண்டு வந்ததை ஸ்ரீ சத்திய மூர்த்தியும் மற்றும் பலரும் கவனித்திருந்தார்கள் என்பதற்கு அவருடைய மேற்கூறிய பிரசங்கமும் அதை ஆமோதித்த சபையின் கரகோஷமும் அத்தாட்சியாயின.

பின்னர், அடுத்த 1938-ம் வருஷம் ஜூன் மாதம் 29-ஆம் நாள் அன்று சென்னை ரேடியோ நிலையத்தில் ஸ்ரீ



சத்தியமூர்த்தி நிகழ்த்திய பிரசங்கத்தில் பின்வருமாறு கூறினார்:—

"மேலும், தமிழ் நாட்டில் பாடகர்கள் கச்சேரிகளில் தமிழ்ப் பாடல்களை அதிகமாகப் பாடவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழில் அழகிய பாடல்கள் இல்லை என்று சொல்வது வீண் சாக்கு... என்னுடைய ஆசை நம் கச்சேரிகள் சுமார் இரண்டு இரண்டரை மணிக்குள் முடிக்கப் பட்டு அதில் பாதிக்கு மேல் தமிழ்ப் பாட்டுகள் இருக்க வேண்டும் என்பது...''*

தலைவர் ராஜாஜியின் அபிப்பிராயமும் தமிழ்ப்பாட்டுக் கிளர்ச்சியை ஆதரிக்கிறது என்பதை அந்த நாளிலேயே நான் அறிந்து கொண்டேன். பிற்காலத்தில் தமிழிசையைப் பற்றிக் காரசாரமான விவாதங்கள் நடந்து கொண்டிருந்த போது ராஜாஜி தீர்க்காலோசனையுடனும் தீர்க்க திருஷ்டியுடனும் சீர்தூக்கி ஆராய்ந்து எழுதிய கட்டுரையை இந்த நூலின் அனுபந்தத்தில் காணலாம்.

* * * * *

தமிழிசை இயக்கத்துக்கு 1941-ம் ஆண்டில் ஒரு பெரிய அதிர்ஷ்டம் வந்தது. தமிழ்நாட்டின் மிகப் பெரிய தனவந்தர் என்றும், கொடையாளி என்றும் புகழ் பெற்றிருந்த ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் அவர்களுக்கு அந்த இயக்கத்தைப் பலமாக நடத்த வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அண்ணாமலை சர்வகலா சாலையில் அதற்காக ஒரு மகாநாடு நடந்தது. மகாநாட்டை யொட்டிப் பல வித்வான்களின் தமிழிசைக் கச்சேரிகளும் நடந்தன. மேற்படி மகாநாட்டைப் பற்றிக்

* சத்தியமூர்த்தி பேசுகிறார்; பக்கம் 126; பிரசுரம் : தமிழ்ப்பண்ணை, தியாகராய நகர், சென்னை.

"கல்கி"யில் நான் எழுதிய கட்டுரைதான் இந்தப் புத்தகத்தில் முதல் கட்டுரையாக அமைந்திருக்கிறது.

அச்சமயம் அமெரிக்காவிலிருந்த ஸர் ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார் "கல்கி" பத்திரிகையின் மூலம் தமிழிசை இயக்கத்தைப் பற்றித் தெரிந்து கொண்டார். அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்த பிறகு மேற்படி இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார். இந்த இரு தமிழ் நாட்டுப் பிரமுகர்களின் முயற்சியினால் தமிழ் இசை இயக்கம் பெரிதும் பலமடைந்தது. இயக்கத்தை வளர்ப்ப தற்குத் தமிழ் இசைச் சங்கம் முதலிய நிரந்தர ஸ்தாபனங் களும் ஏற்பட்டன.

இப்படி ஒரு பக்கத்தில் தமிழிசை இயக்கம் துரிதமாக வளர்ந்து வந்த போது, மற்றொரு பக்கத்தில் அதற்குப் பலமான எதிர்ப்பும் உண்டாகி வளர்ந்தது.

தமிழிசையை மூர்த்தண்யமாக எதிர்த்தவர்களில் டி. கே. சி. அவர்களுக்கும் எனக்கும் வெகு நாளையப் பழக்க முள்ள சிநேகிதர்கள் சிலரும் இருந்தார்கள்.

எதிர்ப்பின் வேகத்தினால், ஏற்கெனவே சிதம்பரத்தில் தமிழிசை மகாநாட்டில் கலந்து கொண்டு சங்கீத வித்வான் களில் பலர் பின்னால் நடந்த தமிழிசை மகாநாடுகளில் கச்சேரி செய்வதற்குத் தயங்கினார்கள்; சிலர் அடியோடு மறுதளித்தும் விட்டார்கள்.

எனவே, எதிர்ப்புக்குப் பதில் சொல்லவேண்டிய அவசியம் நேரிட்டது. வாதப் பிரதிவாதங்கள் மேலும் மேலும் காரசாரமாகிக் கொண்டு வந்தன. அந்த நாட்களில் "கல்கி"யில் எழுதப்பட்ட கட்டுரைகள்தான் பெரும்பாலும் இந்தப் புத்தகத்தில் அடங்கி யிருக்கின்றன.

கட்டுரைகள் எல்லாம் விஷயத்தைப் பொறுத்தனவே தவிர மனிதர்களைப் பொறுத்தனவல்ல வென்பதைத்



தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். விவாதத்தின் வேகம் காரணமாக யாருடைய மனமாவது நோகும்படியான வார்த்தைகள் இந்தக் கட்டுரைகளில் சேர்ந்திருந்தால் அதற்காக அவர்களுடைய மன்னிப்பைக் கோருகிறேன்.

* * * * *

தமிழிசை இயக்கத்தின் வளர்ச்சியைப் பற்றிச் சொல்லும் போது ஒரு விஷயத்தை அவசியம் குறிப்பிட்டே தீரவேண்டும். அந்த இயக்கத்துக்கு ஆதரவு தந்து, உதவி புரிந்து வளர்த்தவர்கள் எத்தனையோ பேர் இருக்கத்தான் இருக்கிறார்கள். எனினும் தமிழிசை இயக்கம் மிகத் தீவிர மான எதிர்ப்புக்கு உள்ளாகி இருந்த போது, அது அடியோடு விழுந்துவிடாமல் தாங்கி நின்று நிலைநாட்டிய வர்கள் யார் என்பதை உண்மையாகச் சொல்ல வேண்டு மானால், என்னுடைய நண்பர் ஸ்ரீ டி. சதாசிவமும் அவருடைய மனைவியார் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களுந்தான் என்று சொல்ல வேண்டும்.

ஸ்ரீமதி எம். எஸ். பழைய கர்நாடக் சங்கீத வித்வத் பரம்பரையைச் சேர்ந்தவர். தியாகராஜ கிருதிகள், தீக்ஷிதர் கீர்த்தனங்கள், தெலுங்கு ஜாவளிகள், பதங்கள் ஆகிய வற்றில் குழந்தைப் பிராயம் முதல் பயிற்சி பெற்று அபிமானமும் கொண்டவர். நமது சங்கீத வித்வான்களில் மிகப் பெரும்பாலோரைப் போல் அவரும் ஸ்ரீ தியாகராஜ ரையே சங்கீத பரமாச்சாரியராகக் கொண்டிருப்பவர். தியாகராஜ ஆராதனை தினத்தன்று அவர் பயபக்தியோடும் ஆசார அனுஷ்டானத்தோடும் பூஜை முதலியவைகள் செய்து தியாகராஜ கீர்த்தனங்களை ஆத்மார்த்தமாகப் பாடி மெய்ம்மறந் திருப்பது வழக்கம்.

அத்தகையவர் தமிழிசை இயக்கத்தின் நியாயத்தை உணர்ந்து உற்சாகத்துடன் அவ்வியக்கத்தில் ஈடுபட்டார். புதிது புதிதாகப் பல தமிழ்க் கீர்த்தனங்களைக் கற்றுக்

கொண்டும், தாமாகவே மெட்டுகள் அமைத்துக் கொண்டும் கச்சேரிகள் பாடிப் பிரபலப் படுத்தினார்.

'கச்சேரிகளில் பல்லவிக்கு முன்னால் தமிழ்ப் பாட்டுப் பாடக் கூடாது; அப்படிப் பாடினாலும் ஒன்று இரண்டு தான் பாடலாம்' என்னும் நிர்ப்பந்தத்தை ஒப்புக் கொள்ள மறுத்து, அவ்வாறு கட்டாயப்படுத்தும் சங்கீத சபைகளில் கச்சேரி செய்யவும் மறுதளித்தார். இது காரணமாகச் சிறந்த சங்கீத ரஸிகர்கள் அடங்கிய மியூஸிக் அகாடமி போன்ற மகாசபைகளில் ஸ்ரீமதி எம். எஸ். அவர்களின் சங்கீதக் கச்சேரி நடைபெற முடியாமற் போயிற்று. இது அவருக்கு ஓரளவு வருத்தத்தை அளித்த போதிலும் அதைப் பொருட்படுத்தாமல் தமக்கு நியாயமென்று தோன்றிய காரியத்தில் உறுதியுடன் நின்று வருகிறார்.

ஆகவே தமிழிசை இயக்கத்துக்கு உண்மையில் உயிர் அளித்து அதை நாளது வரையில் உறுதியாக நிலைநாட்டி வருகிறவர்கள் நண்பர் ஸ்ரீ. டி. சதாசிவமும் அவருடைய மனைவியார் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியும்தான் என் பதைப் பற்றிச் சிறிதும் ஐயமில்லை. இந்தத் தம்பதிகளின் உறுதியான ஆதரவு இருந்திராவிடில், நாலு வருஷத்திற்கு முன்பு தமிழிசை இயக்கத்துக்கு ஏற்பட்ட மாபெரும் எதிர்ப்பைச் சமாளிக்க முடிந்திருக்குமா என்பது சந்தேகந் தான்.

* * * * *

தமிழ் நாட்டுக்குப் பலர் பலவித பெருமைகளைக் கூறுவார்கள். "தமிழிலே உள்ளது போன்ற சிறந்த இலக் கியங்கள் உலகில் வேறு எந்த பாஷையிலும் இல்லை'' என்று சொன்னால், அதைப் பற்றி விவாதிப்பதற்கு இட முண்டு. "தமிழ் இலக்கியங்களைக் காட்டிலும் சிறந்த இலக் கியங்கள் வேறு மொழிகளில் இருக்கத்தான் இருக்கின்றன'' என்று சிலர் வாதிக்கலாம்; சாதிக்கவும் செய்யலாம்.



ஆனால் இரண்டு கலைத் துறைகளில் தமிழகம் இணையற்ற பெருமை வாய்ந்தது என்பதைப் பற்றி யாருமே ஆட்சேபிக்க மாட்டார்கள்.

**தமிழ் நாட்டில் உள்ளவை போன்ற சிற்பக் கலையின் சிகரமான ஆலயங்கள் உலகில் வேறு எங்கும் இல்லை.**

**தமிழ் நாட்டில் வழங்கும் கர்நாடக சங்கீதத்தைப் போன்ற சங்கீதம் உலகில் வேறு எங்கேயும் கிடையாது.**

ஹிந்துஸ்தானி சங்கீதத்தையும் ஐரோப்பிய சங்கீதத் தையும் தமிழர்கள் பயின்று தேர்ச்சி பெற்று விடலாம்.

ஆனால் கர்நாடக சங்கீதத்துக்குரிய ஒரு கனராகத்தை வேறு எந்த நாட்டு மகா சங்கீத வித்வானாலும் எவ்வளவு முயன்றாலும் முறைப்படி ஆலாபனம் செய்ய முடியாது.

* * * * *

கர்நாடக சங்கீதம் தமிழ் நாட்டுக் குரியது என்பதைப் பற்றியோ எள்ளளவும் சந்தேகமில்லை.

விஜயநகர சாம்ராஜ்யத்தின் கீழ் தமிழகம் வந்திருந்த போது விஜயநகர மன்னர்களும் நாயக்க அரசர்களும் தமிழ்நாட்டில் பல ஆலயங்களையும் ஆலய கோபுரங்களை யும் நிர்மாணித்தார்கள். இக்காரணத்தினால் தமிழ் நாட்டின் சிற்பக்கலை ஆந்திர தேசத்துக்கு உரியதாகி விட்டது.

அதுபோலவே ஸ்ரீ தியாகராஜர் முதலியவர்கள் தெலுங்கிலே சிறந்த சாஹித்யம் செய்திருப்பதால் கர்நாடக சங்கீதம் ஆந்திர தேசத்துக்கு உரியதாகி விடாது.

ஆலய சிற்பக்கலை ஆந்திர தேசத்துக்கு உரியதென் றிருந்தால், ஆந்திர நாட்டில் அல்லவா பெரிய ஆலயங்கள் கட்டப்பட்டிருக்க வேண்டும்? அதுபோலவே கர்நாடக

சங்கீதம் கன்னட தேசத்துக்கு உரியதென்றிருந்தால், அந்த நாட்டிலே யல்லவா சாஹித்ய கர்த்தர்களும் சிறந்த சங்கீத வித்வான்களும் தோன்றி இருக்க வேண்டும்?

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அப்பர் சம்பந்தர் சுந்தரர் முதலிய நாயன்மார்கள் கையாண்ட அற்புத இசைக்கலைதான் காவேரி தீரத்திலும் பொருனை நதிக் கரையிலும் மேலும் மேலும் வளர்ச்சி அடைந்து தற்போதைய உத்தம நிலையை அடைந்திருக்கிறது.

எனவே, தமிழ்நாட்டுக்குரிய சங்கீதக் கலையைத் தமிழ் மொழியின் மூலமாக வளர்க்க வேண்டும் என்றும், தமிழ் நாட்டில் நடக்கும் கச்சேரிகளில் தமிழ்ப்பாட்டுகளை அதிகமாகக் கையாள வேண்டும் என்றும் சொல்வோரின் கட்சி மிகவும் நியாயமானதாகும். அத்தகைய நியாயமான இயக்கத்தை எதிர்ப்பதும், அப்படி எதிர்க்கும்போது தமிழ் மொழியையே குறைவு படுத்திப் பேசுவதும் மிகப் பொருந்தவறு என்பதில் எள்ளளவும் ஐயமில்லை

மேற்கூறிய நியாயமற்ற எதிர்ப்பினால், சம பாவமும் விசால நோக்கமும் கொண்ட தமிழ் மக்கள் பலருங்கூடப் பிற பாஷைக் கீர்த்தனங்களை அடியோடு வெறுக்கும் படியாக ஏற்பட்டு வருகிறது.

இத்தகைய விபரீத விளைவு ஏற்படாமலும் கர்நாடக சங்கீதக் கலையின் தரம் அணுவளவும் குறையாமலும் தமிழிசை இயக்கத்தை நல்ல முறையில் வளர்க்கவேண்டும் என்பதுதான் இந்தப் புத்தகத்தில் அடங்கிய கட்டுரை களின் நோக்கம். அந்த நோக்கம் நிறைவேறுவதற்கு இந்தப் புத்தகம் சிறிதேனும் உதவியாயிருக்கும் பட்சத்தில், தமிழ்ப் பண்ணைச் சின்ன அண்ணாமலை அவர்கள் இதைப் பிரசுரிப்பதற்காக எடுத்துக் கொண்ட முயற்சி பலனடைந்த தாகும்.

குற்றாலம் — ரா. கிருஷ்ணமூர்த்தி

28—2—47 — "கர்நாடகம்"

## சங்கப்பலகை

### சின்ன அண்ணாமலை

தமிழ்நாட்டில் மதுரை மா நகரம் மிகவும் பிரசித்தி பெற்றது. அறுபத்துநான்கு திருவிளையாடல்கள், பாண்டிய மன்னர்களின் ஆட்சித் திறமை, தமிழ் வளர்த்த சங்கம்—இவைதான் அதற்குக் காரணமாகும். இதெல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ் மக்களின் நாகரிகத்தையே உலகிற்கு எடுத்துக் காட்டுவது போன்ற விண் மறைக்கும் கோபுர மாகவும், வினை மறைக்கும் கோவிலாகவும், கண்ணமைந்த காட்சியாகவும் மீனாட்சி அம்மன் ஆலயம் மதுரைமா நகரம் நிரந்தரமான சிறப்புக்குச் சிகரம் வைத்ததுபோல் அமைந்திருக்கிறது.

தற்போது மதுரை அரசியல் துறைகளிலும் பிரசித்தி யடைந்திருக்கிறது. தேசிய இயக்கத்தில் மதுரை எப்போதும் முன்னணியில் நின்று வருகிறது. ஆலயப் பிரவேசம்கூட முதன் முதலில் மதுரையில்தான் நடந்தது!

இப்படி எல்லாத் துறைகளிலும் முன்னணியில் நிற்கும் மதுரை சங்கீத விஷயத்திலும் முன்னணியில் நிற்பதில் ஆச்சரியமில்லை.

காலஞ்சென்ற பிரபல சங்கீத வித்வான் புஷ்பவனம் அய்யர், தற்காலம் பிரசித்தி யடைந்துள்ள மதுரை மணி அய்யர், ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி முதலிய முதல்தர வித்வான்களைத் தமிழ்நாட்டுக்கு ஈந்த பெருமை மதுரைக்குத்தான் உண்டு.

இத்தகைய பிரசித்தி வாய்ந்த மதுரைமா நகரத்தில், "பொற்றாமரைக் குளம்'' என்று ஒரு குளம் இருக்கிறது. அந்தக் குளத்தில் வெகு காலத்துக்கு முன்பு 'சங்கப் பலகை' என்பதாக ஒரு பலகை இருந்ததாம். அந்தப் பலகைக்குத் தயை தாட்சண்யம் என்பது கொஞ்சமும் இடையாதாம். தகுதியுள்ளவர்களை ஏற்றுக் கொள்வதும், மற்றவர்களைத் தள்ளிவிடுவதும் அதன் பிடிவாத துர்க்குணமாக இருந்ததாம்!

இதனால் அநேகர் அதில் ஸ்தானம் பெற முயன்றும் முடியாமற் போய்விட்டது. சங்கப் பலகை அங்கீகரித்த வித்வான்கள்தான் வித்வான்கள் என்றும் மற்றவர்கள் எல்லாம் 'போலி' என்றும் ஆகிவிடுமாம். ஆகவே சங்கப் பலகையினால் ஏற்றுக்கொள்ளப்படாத பண்டிதர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் அனைவரும் கோபம் கொண்டு மேற்படி பலகையைச் சுக்கு நூறாக்கிவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டார்கள்.

ஒரு சிலர் பொற்றாமரைக் குளத்தில் படகேறிச் சென்று சங்கப் பலகையில் தொத்திக்கொள்ள முயற்சித்தார்கள். சிலர் கட்டு மரம் கட்டிகொண்டு போய்ப் பலகையைத் துண்டு துண்டாக வெட்டிவிட வேண்டுமென்று கோடாலியுடன் புறப்பட்டார்கள்.

சிலர் ஜலத்துக்குள் கள்ள மறைவாக நீந்திப்போய் முக்குளித்துப் பலகையில் ஏறிவிடப் பிரயத்தனப்பட்டார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. எனவே, பலகையைப் பொசுக்கிவிட வேண்டுமென்று நெருப்புப் பந்தத்துடன் கிளம்பினார்கள். நெருப்புதான் அணைந்ததே ஒழியப் பலகையைப் பொசுக்க முடியவில்லை.

கடைசியாக, "இது தெய்வீக சக்தி வாய்ந்தது. தமிழ் மக்களின் தரத்தையும் தகுதியையும் அறிந்து கொள்ளத் தமிழ்க் கடவுளால் அளிக்கப்பட்ட தராசு. இதில் ஏறு



வதற்கு நம்மை நாம் தகுதியாக்கிக் கொள்ள வேண்டுமே ஒழியப் பலகை மீது கோபப்படுவதில் பயனொன்றுமில்லை'' என்று கண்டு கொண்டார்கள்.

இப்படி மக்களுக்கு மிகவும் உதவியாக இருந்த மேற்படி சங்கைப் பலகை திடீரென்று ஒருநாள் காணாமற் போய்விட்டது. சங்கப் பலகை எப்படி மறைந்தது எங்கே போயிற்று என்பதை யாராலும் கண்டு பிடிக்க முடியவில்லை. அனைவரும் கையை நெரித்துக் கொண்டார்கள். செம்படவர்களை வரவழைத்துப் பொற்றாமரைக் குளத்தில் வலைபோட்டுப் பார்த்தார்கள். ஊஹூம்! சங்கப் பலகை கிடைக்கவே யில்லை.

* * * * *

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் 'கர்நாடகம்' என்ற பெயரில் ஒருவர் கலைகளைப் பற்றி விமரிசனம் செய்ய ஆரம்பித்தார். சங்கீதம், நாட்டியக் கலை, நாடகம், சம்பந்தமாக அவர் எழுதிய விமரிசனங்களைப் படிக்கப் படிக்கத் தமிழ் மக்களுக்கு ஒரே ஆச்சரியமாகப் போய் விட்டது.

"இப்படியும் தராதரம் அறிந்து எழுத முடியுமா?'' என்று அதிசயித்து மூக்கின் மேல் விரலை வைத்தார்கள்! தமிழ்நாட்டில் காணாமற் போன சங்கப் பலகைதான் இப்படி மனித உருவத்தில் 'கர்நாடகம்' என்ற பெயரில் தோன்றித் தமிழர்களுக்குத் தராசாக இருக்கிறதோ என்று கூடச் சந்தேகிக்கத் தொடங்கினார்கள். அவர்களுடைய சந்தேகம் நாளடைவில் ஊர்ஜிதமாயிற்று.

தமிழ்க் கடவுள் "சங்கப் பலகைக்கு வேறு எந்த தேசமும் லாயக்கில்லை. அது தங்குவதற்குரிய இடம் தமிழ் நாடுதான்'' என்று முடிவு கட்டியிருக்க வேண்டும். எனவே, மேற்படி பலகைக்கு மனித ரூபமளித்து **'கர்நாடகம்'** என்ற

மாற்றுப் பெயருடனே தமிழ் மக்களின் இதயத்திலே மிதக்க விட்டிருக்கிறார். அன்று முதல் கர்நாடகம் ஏற்றுக் கொண்ட சங்கீத வித்துவான்தான் உண்மையான சங்கீத வித்துவான் என்ற மனப்பான்மை தமிழ் மக்களுக்கு உண்டாயிருக்கிறது.

தமிழிசை இயக்கத்துக்கு கல்கி செய்திருக்கிற சேவையும் உபகாரமும் மகத்தானது.

கல்கி பத்திரிகையை ஆரம்பித்த புதிதில் 'கர்நாடகம்' **'சங்கீத யோகம்'** என்ற இப் புத்தகத்தின் முதற் கட்டுரையை எழுதினார். அது முதல் சங்கீதத்துக்கும் தமிழுக்கும் ஒரே யோகமாய்ப் போய்விட்டது!

பின்னர், ஒவ்வொரு கல்கி இதழிலும் தமிழிசை சம்பந்தமான கட்டுரைகள் வெளிவரத் தொடங்கின. சங்கீத சம்பந்தமான காரசாரமான விவாதங்களும் கிளம்பின. அதற்குமேல் சர்ச்சைகளும், நுணுக்கங்களும் அலசப்பட்டன. 'தமிழில் பாடவேண்டியதன் அவசியம்' பற்றிய விளக்கங்களும் ஆலோசனைகளும் அழுத்தமாகவும் ஆணித்தரமாகவும் சொல்லப்பட்டன. அத்துடன் தமிழிசை இயக்கத்துக்கு எதிர்ப்பும் பலமாகிக் கொண்டு வரவே கர்நாடகத்தின் கட்டுரைகள் 'மாரி சரமாரியாக' ராம பாணங்கள் போல் கிளம்பி 'ராவணாதிகளை' எல்லாம் முறியடித்துத் தமிழ்த் தாய்க்கு வெற்றி தேடித் தந்தன.

தமிழுக்கு வெற்றி தேடித் தந்த மேற்படி கட்டுரைகளின் தொகுப்பே சங்கீதயோகமாக மாறியிருக்கிறது.

* * * * *

தெளிந்த நீரோட்டத்தைத் தெளிந்த நீரோட்டமென்றும் பாசிபிடித்த குட்டையைப் பாசிபிடித்த குட்டை என்றும் கர்நாடகம் எப்போதும் சொல்லத் தயங்கியதே கிடையாது. தம்முடைய ஊரில் ஓடும் சாக்கடையாயிற்றே



என்பதற்காக அவர் அதற்கு விசேஷ சலுகை காட்டி அதைப் புண்ணிய தீர்த்தம் என்றும் கூறுவது கிடையாது. கல்கியின் பாரபட்சமற்ற கலை விமரிசனங்களுக்குத் தகுந்த உதாரணங்களும் உண்டு:

ஒரு சமயம் காங்கிரஸ்வாதியும் கதர் அபிமானியுமான ஒரு பெண்மணியின் டாக்கி நடிப்பு சுகமில்லை என்று கர்நாடகம் எழுதினார். உடனே சிலர், "அடடா! அந்தப் பெண்மணி எப்போதும் கதர் அணிபவராயிற்றே! தேர்தல் கூட்டத்தில் வந்துகூடப் பாடுவாரே! அவரைப் பற்றி இப்படி எழுதலாமா?" என்று கேட்டார்கள். அதற்கு கல்கி "அந்தக் கதரபிமானமுள்ள பெண்மணி காங்கிரஸ் அபேட்சகராக எங்கேயாவது தேர்தலுக்கு நின்றால், 'அவருக்கு ஓட்டுக் கொடுங்கள்' என்று பிரசாரம் செய்வேன். ஆனால், ஒருவர் காங்கிரஸ்வாதி என்பதற்காக அவருடைய அபஸ்வரங்களை ஸுஸ்வரங்களென்றோ, மோசமான நடிப்பை நல்ல நடிப்பென்றோ நான் ஒப்புக் கொள்ள முடியாது. அம்மாதிரி நிலைமை ஏற்பட்டு விட்டால் அப்புறம் டாக்டர் ராஜன் பாட்டுக் கச்சேரி செய்தால் நன்றா யிருக்கிறதென்று சொல்ல வேண்டும். ஸ்ரீ முத்துரங்க முதலியார் கதா காலட்சேபம் செய்தால் அதற்கும் பலே போட வேண்டும். ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி பரதநாட்டியம் ஆடினால்கூடத் தலையை ஆட்ட வேண்டி நேரும். இப்படியெல்லாம் வந்துவிட்டால் தமிழ் நாட்டில் கலைகள் உருப்பட்டாற் போலத்தான்!" என்றார்.

இதைப்போலத்தான் தமிழிசை சம்பந்தமாகவும் அவர் நேர்மையாகவும் கண்ணியமாகவும் நடந்து கொண்டார்.

தமிழிசை இயக்கத்தின் பேரில் உள்ள ஆர்வத்தினால் தமிழ்ப் பாட்டுப் பாடுபவர்கள் எல்லோரும் சிறந்த வித்வான்கள் என்று ஒருபோதும் கூறியதில்லை. பரதநாட்டியத்திலும் சங்கீதத்திலும் அவருக்குள்ள அபிமானம் காரண

மாகத் தமிழ் நாட்டில் காலைத் தூக்கிக் குதிப்பவர்களை யெல்லாம் உயர்ந்த நாட்டியக்காரர்களென்றோ வாயைத் திறந்து பாடுபவர்களையெல்லாம் சிறந்த சங்கீத வித்வான்க ளென்றோ கூறிவிடமாட்டார்.

ஒரு வித்வானுடைய சங்கீதம் கர்நாடகத்துக்குப் பிடிக் கிறது என்று வைத்துக்கொள்வோம். ஆனால், மேற்படி வித்வான் பிடிவாதமாய் "தமிழ்ப்பாட்டுப் பாடமாட்டேன் வேறு பாஷையில்தான் பாடுவேன்'' என்றால் அதற்காக அவருடைய சங்கீதம் நன்றாயில்லை யென்று சொல்லும் வழக்கம் கல்கிக்குக் கிடையாது. "ஐயோ! இந்தப் பாவி மனிதர் இவ்வளவு நன்றாகப் பாடுகிறாரே, இவர் தமிழ் அபிமானியாகவும் இருக்கக் கூடாதா?'' என்று எண்ணித் தான் வருந்துவார்.

* * * * *

சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே கல்கியும்
டி.கே.சி.யும் சேர்ந்து தமிழிசை இயக்கத்தைத் தோற்றுவித்
தார்கள். பாரதியார் இவர்கள் இருவரையும் முந்திக்
கொண்டு, வித்வான்கள் வேறு பாஷைகளில் பாடுவதைக்
கண்டு வருத்தப்பட்டுக் கட்டுரை எழுதியிருக்கிறார்.
பதினைந்து ஆண்டுகளுக்கு முன் இவர்கள் இருவரும்
ஆரம்பித்த இயக்கத்தில் வெகு உற்சாகமாகக் கலந்து
கொண்டு அநேகம் வித்வான்களை நேரில் சந்தித்துப்
பிரசாரம் செய்த இருவரைத் தமிழ்நாடு மறக்கக் கூடாது.
அவர்கள் ஹரிஜன் ஆசிரியராக இருந்த ஸ்ரீமான் சாஸ்திரி
யார் அவர்களும் அவர்களுடைய மனைவியாருமாவர்.
இவர்கள் அனைவருடனும் தலைவர் சத்தியமூர்த்தியும்
சேர்ந்துகொண்டார். அதைப் போலவே ராஜா சர்
எல்லோரையும் காட்டிலும் இயக்கத்தில் அதிக தீவிரம்
காட்டிப் பெரிய முறையில் அதற்கு அஸ்திவாரம்
அமைத்து மாளிகை கட்டத் தொடங்கினார்.



இத்தனை பேரும் சேர்ந்து செய்த பெருங் கிளர்ச்சி தான் தமிழ்நாடெங்கும் புத்துணர்ச்சியை உண்டாக்கியது. "பாஷை முக்கியமா? சங்கீதம் முக்கியமா?'' என்ற சர்ச்சை கள் கிளம்பின. "பாஷை சங்கீதம் இரண்டும் முக்கியம் தான்'' என்று தமிழிசைக்காரர்கள் சொன்னார்கள்.

"பாஷை முக்கியமில்லை. சங்கீதம்தான் முக்கியம்'' என்று தமிழிசை விரோதிகள் கூறினார்கள். தமிழ்நாட்டில் தமிழிசையின் முக்கியத்தைக் குறித்து கர்நாடகம் அவர்கள் எத்தனைதான் எடுத்துச் சொன்னபோதிலும் துரதிருஷ்ட வசமாக அநேக வித்வான்கள் தமிழிசைக்காரர்களைத் தங்கள் பகைவர்கள் என்றே எண்ணத் தொடங்கினார்கள். அப்படிக் கருதுவது எவ்வளவு பெரிய தவறு என்பதை உணர்ந்து கொள்ள வேண்டுமானால் தயவு செய்து மேற் கண்ட வித்வான்களை இந்தப் புத்தகத்தை ஒரு முறை படித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். நிற்க.

முதன் முதலில் சிதம்பரம் தமிழிசை மகாநாடு முடிந்தவுடன் தேவகோட்டையில் ஒரு தமிழிசை மகாநாடு கூட்ட வேண்டுமென்ற ஆசை எனக்கு உண்டாயிற்று. இதற்குத் தூண்டுகோலாக இருந்தது கல்கியின் கட்டுரை களும் டி. கே. சி. அவர்களின் "சங்கீதமும் சாகித்யமும்''* என்ற கட்டுரையும்தான். என்னைப் போலவே இன்னும் பலரை இவர்கள் தங்கள் கட்டுரைகள், பிரசங்கங்களின் மூலம் தமிழிசையில் உற்சாகம் கொள்ளும்படிச் செய்தார் கள். அதன் பலனாகப் பல ஊர்களில் தமிழிசை மகாநாடு களும் தமிழிசைச் சங்கங்களும் ஆரம்பமாயின.

---

* இதய ஒலி என்ற புத்தகத்தில் டி. கே. சி. யின் கட்டுரைகளில் ஒன்று. வெளியீடு, தமிழ்ப்பண்ணை.

ஒவ்வொரு மகாநாட்டிற்கும், சங்கத்திற்கும் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் ஆர்வத்துடன் உதவி செய்தார்கள். பல இடங்களுக்கு நேரே சென்று உற்சாகம் ஊட்டினார்கள். அதுபோலவே தேவகோட்டை மகாநாட்டுத் திறப்பாளராக விஜயம் செய்து சிறப்பாக மகாநாட்டை நடத்தி வைத்தார்கள். ஸ்ரீ டி. கே. சி. அவர்களும் கல்கி அவர்களும் மகாநாட்டில் கலந்துகொண்டு மகாநாட்டை வெற்றிகரமாக முடித்துக் கொடுத்தார்கள்.

மகாநாடு ஆரம்பமாவதற்கு முதல் நாள் மகாநாட்டின் நோக்கமாகிய தமிழிசைக் கச்சேரி ஒன்றை நடத்த விரும்பினோம். அந்தக் கச்சேரிக்கு ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்களை அழைத்தோம். ஸ்ரீமதி எம். எஸ். ஸின் கணவர் ஸ்ரீ சதாசிவம் அவர்களுக்குப் "பெரும்பாலும் தமிழ்ப் பாட்டுப் பாடவேண்டும். ஸ்ரீமதி எம். எஸ். வர இயலுமா?'' என்று எழுதிக் கேட்டோம். ஸ்ரீ சதாசிவம் அவர்கள் **"பெரும்பாலும் தமிழ்ப் பாட்டுக்கள் பாட இயலாது. கச்சேரி முழுதும் தமிழ்ப் பாட்டுக்கள் பாடத்தான் இயலும். சம்மதமா?''**. என்று எழுதினார். அப்படியே ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமி மகாநாட்டுக்கு முதல் நாள் வந்து ஒரு மகத்தான முழுத் தமிழிசைக் கச்சேரி செய்து சபையோரைப் பரவசத்தில் ஆழ்த்தினார். தமிழின் இனிமையும் சங்கீதத்துக்குத் தமிழ் எவ்வளவு எடுத்த பாஷை என்பதும் அன்று ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் கச்சேரியில் தான் நன்கு விளங்கின.

**"இனிய தமிழில் பாடி**
**இசைக் கலையை வளர்ப்போம்''**

என்ற கோஷம் தேவகோட்டை மகாநாட்டில்தான் முதலில் உண்டாயிற்று. அந்தக் கோஷம் 'கல்கி' என்ற கர்நாடகத்தின் மூலம் தமிழ் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் சென்று வீட்டுக்கு வீடு கதவைத் தட்டி எழுப்பியது.



கர்நாடகம் அவர்களின் தமிழிசை இயக்கம் சம்பந்தமான பல கட்டுரைகள் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன. இவற்றை வெளியிட அநுமதியளித்த ஸ்ரீ. ரா. கிருஷ்ண மூர்த்தி (கல்கி) அவர்களுக்கு வந்தனம் தெரிவித்துக் கொள்ளக் கூச்சமாக இருக்கிறது. ஏனெனில், அது வாயானது கைக்கு வந்தனம் சொல்லுவதுபோலாகும். ஆனால், **"தமிழ் மொழியின் சரித்திரத்திலேயே ஒரு புதுமையையும் புத்துணர்ச்சியையும் உண்டாக்கிய பரோபகாரி கல்கி''** என்று பிற்கால சரித்திர ஆசிரியர்கள் எழுதுவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**சின்ன அண்ணாமலை.**

தமிழ்ப்பண்ணை
தியாகராஜ நகர்
24-4-47

## பொருளடக்கம்


01

1. சங்கீத யோகம் 07
2. சிதம்பரம் மகாநாடு 18
3. பயப்பட வேண்டாம்! 30
4. தேவகோட்டை மகாநாடு 43
5. அரியக்குடியும் தமிழும் 47
6. நிரவல் விஷயம் 56
7. சங்கீத விழாக்கள் 62
8. ஐயங்காரின் தமிழ்க் கச்சேரி 69
9. திறப்பு விழாக்கள் 75
10. கிளிப்பிள்ளை ஆட்சேபம் 82
11. தாய்மொழிப் பகைமை 85
12. சண்டை என்னத்திற்கு? 91
13. பெரிய முயற்சி 94
14. தமிழிசையும் பிராமணர்களும் 98
15. தரம் குறையுமா? 105
16. யோக காலம் 109
17. சென்னைத் தமிழிசை மகாநாடு 121
18. தமிழ்த் தாயின் வெற்றி 125
19. மூன்று கச்சேரிகள் 135
20. கர்நாடக சங்கீத வித்வான்களுக்கு 145
21. செம்மங்குடியின் தொண்டு 153
22. பரமசிவனுக்குத்தான் தெரியும் 157
23. ஸர். சி.பி.யின் அபிப்பிராயம் 165
24. மகத்தான கச்சேரி 171
25. செம்பை செய்த அற்புதம் 175
26. எதிர்ப்பு விழுந்து விட்டது 178
27. முற்றுப் புள்ளி

அனுபந்தம்
தமிழ்ப் பாட்டு இயக்கம் - ராஜாஜி 181


# சங்கீத யோகம்

"கச்சேரிகளில் தமிழ்ப் பாட்டுக்கள் அதிகம் பாட வேண்டும்" என்ற பல்லவியைச் சில சிநேகிதர்களுடன் நானும் வெகு நாளாகப் பாடிக் கொண்டு வந்திருக்கிறேன். தமிழ் நாட்டில் தமிழ் வித்வான்கள் செய்யும் கச்சேரிகள் விஷயத்திலேதான் இதைச் சொல்லி வந்தோம். பலன் கொஞ்சம் ஏற்படத்தான் செய்தது; ஆனால் போதிய அளவு இல்லை. செவிடன் காதில் ஊதின சங்காக முடியுமோ என்று கூடச் சந்தேகப் படும்படி இருந்தது.

ஆனால், எதிர்பாராத முறையில் இந்தக் கட்சிக்குப் பிரமாதமான ஆதரவு இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஒரு பெரிய தனவந்தர்—தமிழ் நாட்டிலேயே பெரிய தனவந்தர் என்றுகூடச் சொல்லாம்—தமிழ்ப் பாட்டுக் கட்சியை ஆதரிக்கத் தொடங்கி யிருக்கிறார். வெறும் வாய்ப் பேச்சினால் இல்லை. அதற்காக ரூபாய் பத்தாயிரம் பணம் செலவழிக்க முன் வந்திருக்கிறார். இந்த முயற்சியில் ஒரு பெரிய கல்வி ஸ்தாபனமும் ஈடுபட முன் வந்திருக்கிறது. அண்ணாமலை சர்வ கலாசாலை இந்தச் சிறந்த பணியை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதற்காக ஒரு மகாநாடு கூட்டியிருக்கிறது. தமிழுக்கு யோகந்தான்—கேட்பானேன்? சங்கீதத்துக்கே யோகந்தான்!

ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் இந்த நல்ல காரியத்துக்காக ரூபாய் பத்தாயிரம் நன்கொடை தந்திருக்கும் விவரம் வெளியானபோதே அந்த அரிய செயல் என்னுடைய கவனத்தைக் கவர்ந்தது. ஆனால், அந்தப் பணத்தை எந்த மாதிரியில் உபயோகப்படுத்தப்

போகிறார்கள் என்னும் விவரம் ஒன்றும் தெரியவில்லை. சர்வ கலாசாலைகளைப் பற்றி எனக்கு எப்போதும் நம்பிக்கை குறைவு. "வேலையைச் சர்வ கலாசாலையிடம் எப்போது ராஜா ஒப்படைத்து விட்டாரோ அப்போது காரியம் நடந்தாற் போலத்தான்!" என்று எண்ணினேன். அது அவ்வளவு சரியில்லையென்று இப்போது தெரிந்து மகிழ்ச்சியடைகிறேன். ஒரு வருஷகாலம் கிணற்றிலே கல் போட்டது போலிருந்தாலும், இப்போது வேலையைத் தீவிரமாகவே ஆரம்பித்திருக்கிறார்கள். அதுவும் நல்ல முறையில் ஆரம்பித்திருக்கிறார்கள். சங்கீத வித்வான்களை யே அழைத்து மாநாடு கூட்டி யோசனை கேட்கத் தீர்மானித்தது அருமையான யோசனை. ஏனெனில் இந்தக் காரியம் சங்கீத வித்வான்களால்தான் நடக்க வேண்டும்; அவர்கள் மனது வைத்தால்தான் நடக்கும்.

இப்படி நான் சொல்லுவதால், நமது சங்கீத வித்வான் களுக்கு இது விஷயத்தில் மனமில்லை என்று கூறுவதாக எண்ணக்கூடாது. உண்மையில், நாலைந்து வருஷமாக நடந்துவரும் தமிழ்ப் பாட்டுக் கிளர்ச்சியில் சங்கீத வித்வான்களில் பெரும்பாலோர் சிரத்தை காட்டித்தான் இருக்கிறார்கள். ஆனால் தமிழ்ப் பாட்டுக்காரர்களை முழுதும் திருப்தி செய்ய அவர்களால் முடியவில்லை. அதில் சில கஷ்டங்கள் வித்வான்களுக்கு இருந்திருக் கின்றன.

இந்தக் கஷ்டங்கள் என்னவென்று சிதம்பரம் மகாநாட்டுக்கு வரும் வித்வான்களைக் கேட்கவேண்டும். அவர்கள் எடுத்துச் சொல்லவேண்டும். பிறகு அந்தக் கஷ்டங்களை நிவர்த்திக்க என்ன வழி என்று யோசனை செய்து முடிவு கட்ட வேண்டும்.

நான் அறிந்தவரையில் வித்வான்களுக்குத் தமிழ்ப் பாட்டுக்கள் பாடுவதில் உள்ள சில கஷ்டங்களைக் குறிப்பிடுகிறேன்:—



தமிழில் பாடும்போது உச்சரிப்பு, அர்த்தம், சமய சந்தர்ப்பம் இவையெல்லாம் கவனித்துப் பாட வேண்டும். வேறு பாஷைப் பாட்டாயிருந்தால் இந்தக் கவலையே கிடையாது. எப்படி வேணுமானாலும் ஹதம் செய்யலாம்!

தமிழ்ப் பாட்டில் ஏதாவது தவறாயிருந்தால் சபையில் நூறு பேர் அதை எடுத்துக்காட்ட முன் வருவார்கள். சமய சந்தர்ப்பத்தைக் கவனித்துப் பாடா விட்டால் வித்வான்கள் மேல் கோபமே உண்டாகிவிடும்.

ஒரு சீமந்தக் கல்யாணத்தில் பாகவதர் கச்சேரி செய்கிறார். "திருவடி சரணம்" என்று கத்தினார் ஒரு ரசிகர். பாகவதரும் ஆரம்பித்தார். ஆனால் அவர் கொஞ்சம் விஷயம் அறிந்தவர்.

**"மறுபடியும் கருவடையும்**
**குழியில் தள்ளி**
**வருத்தப்படுத்த வேண்டாம்"**

என்று அநுபல்லவியைப் பாடும்போது "ராம ராமா! சீமந்தக் கல்யாணத்தில் இதைப் பாடுகிறோமே!" என்று பாடகருக்கே அருவருப்பாய்ப் போய் விட்டது; எனவே மென்று முழுங்கினார். அவருக்கும் பாடியதில் திருப்தி யில்லை; கேட்டவர்களுக்கும் திருப்தி ஏற்படவில்லை.

ஆனால் வேறு பாஷைப் பாட்டாயிருந்தால் இந்த மாதிரி தொல்லை ஒன்றும் இல்லை பாருங்கள். ஒரு பெரிய மனிதர் பெரிய மாளிகை கட்டி கிரகப் பிரவேசம் நடத்தினார். அதில் கச்சேரி செய்த வித்வானை ஹிந்துஸ்தானி பாடச்சொன்னார்கள்.

**"இஸ் கர்கே ஆக் லக் கயீ"**

என்று அவர் அபூர்வ பிர்க்காக்களுடன் பாடிய போது கரகோஷம் பிரமாதமாய்க் கிளம்பிற்று. அந்த வரிக்கு அர்த்தம் மட்டும் தெரிந்திருந்தால் வித்வான்தான்

பாடுவாரா? கேட்பவர்கள்தான் கரகோஷம் செய்திருப்பார்களா? லட்சம் ரூபாய் செலழித்து வீடு கட்டிக் கிரகப் பிரவேசம் செய்யும் சமயத்தில்,

"இந்த வீட்டிலே தீப் பிடித்துக்கொண்டது"

என்று பாடினால், யாருக்குத்தான் அது சம்மதமாயிருக்கும்?

இதெல்லாம் சில்லறைக் காரணங்கள்; வித்வான்கள் சொல்லுவதற்கே வெட்கப்படுவார்கள். ஆனால், அவர்களுக்கு உண்மையான கஷ்டம் ஒன்று இருக்கத்தான் செய்கிறது. அது இதுதான்:

"கச்சேரி பாணியில் பாடிக் களை கட்டச் செய்யும்படியான தமிழ்க் கீர்த்தனங்கள் அதிகமாக இல்லை" என்பது.

சங்கீதக் கச்சேரியில் சாதாரணமாய்க் களை கட்டும் கீர்த்தனங்கள் தியாகராஜ கீர்த்தனங்கள்தான் என்பது சங்கீத வித்வான்களின் அநுபவம். "மன மன வென்று நாலு அய்யர்வாள் கிருதிகளைப் பாடினால் கச்சேரி ஜும்மென்று ஆய்விடுகிறது. நாலு தமிழ்ப் பாட்டுக்களைப் சேர்ந்தாற்போல் .. பாடினால் கச்சேரியின் மவுஸ் இறங்கிவிடுகிறது" என்று சொல்கிறார்கள்.

இதற்குக் காரணம் தமிழுமில்லை; தமிழ்ப் பாட்டுமில்லை. வேறு காரணம் இருக்கிறது.

அய்யர்வாளின் கீர்த்தனங்களைச் சென்று நூறு வருஷ காலமாகத் தென்னாட்டு மகாவித்வான்களெல்லாம் பரம்பரையாகப் பாடி வந்திருக்கிறார்கள். இவ்விதம் பாடிப் பாடி அவைகளுக்கு மெருகு ஏறியிருக்கிறது. அய்யர்வாளின் கீர்த்தனங்களில் அவருக்குப் பிந்காலத்தில் தோன்றிய சகல மகா வித்வான்களின் ஜீவசக்தியும் கலந்திருக்கிறது.



தமிழ்ப் பாட்டுகளை இந்த முறையில் வித்வான்கள் நீடித்துப் பாடி வராதபடியால்தான் அவை துக்கடாவுக்கே லாயக்கு என்று கருதும்படியாக ஆகிவிட்டது.

தமிழ்க் கீர்த்தனங்களையும் சங்கீத வித்வான்கள் சிரத்தையுடன் கொஞ்சகாலம் கையாண்டு வந்தால் அவையும் கச்சேரி பாணிக்கு வந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தக் காரியத்தை எப்படிச் செய்வது, யார் செய்வது என்பதைத்தான் யோசிக்க வேண்டும்.

சமீப காலத்தில் ஒரு கெட்டிக்கார மனுஷர் நமக்கு வழிகாட்டியிருக்கிறார். அவர் ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர்.

மூன்று வருஷத்துக்கு முன்னால் ஸ்வாதித் திருநாளைப் பற்றி அநேகம் பேர் கேட்டே இருக்க மாட்டார்கள். இப்போது ஸ்வாதித் திருநாள் கீர்த்தனங்கள் பிரமாதப்படுகின்றன. எந்தக் கச்சேரியிலும் அவருடைய கீர்த்தனம் ஒன்று நுழைந்து விடுகிறது. பெரிய வித்வான்களும் பாடுகிறார்கள்; சின்ன வித்வான்களும் பாடுகிறார்கள்; ரேடியோ பாடகர்களும் பாடுகிறார்கள்.

இது எப்படி நடந்தது?

திருவாங்கூர் ராஜ்யத்தார் காயகசிகாமணி முத்தையா பாகவதரையும், செம்மங்குடி சீனிவாசய்யரையும் பிடித்தார்கள். மேற்படி வேலையில் ஈடுபடுத்தினார்கள். ஸ்ரீ முத்தையா பாகவதர் மெட்டுக்களைச் சரிபடுத்தித் தந்தார்; செம்மங்குடி அடிக்கடி கச்சேரிகளில் பாடினார். "ஸ்வாதித் திருநாள் பெரிய சாஹித்ய கர்த்தா" என்று எல்லாரும் அறிந்துகொண்டதுடன், ஸ்வாதித் திருநாள் கொண்டாட்டங்களும் நடக்க ஆரம்பித்து விட்டன!

* * * * *

தமிழ்ப் பாட்டை வளர்ப்பதற்கு அண்ணாமலை சர்வ கலாசாலைக்காரர்கள் சில திட்டங்கள் வகுத்திருக்கிறார்கள். தனித் தமிழ்க் கச்சேரிகள் ஏற்படுத்துவது, தமிழ் ஸாஹித்யப் போட்டிகள் வைப்பது—இவையெல்லாம் ரொம்ப நல்ல யோசனைகளே.

இவற்றுடன் திருவாங்கூர் ராஜ்யத்தார் கையாண்ட முறையையும் யோசிப்பது நலம்.

அதாவது ஒரு பெரிய சங்கீத நிபுணரையும் ஒரு கச்சேரி வித்வானையும் சேர்த்துவிட்டு மூன்று வருஷத்துக்கு இதே வேலையாக அமர்த்தவேண்டும். "தமிழிலுள்ள சகல கீர்த்தனங்களையும் பாட்டுக்களையும் ஆராய்ந்து அவற்றைக் கச்சேரி 'பாணி'க்குச் சரிப்படுத்தி அமையுங்கள்'' என்று கேட்டுக் கொள்ளவேண்டும். அரியக்குடி ராமானுஜய்யங்கார், முசிரி சுப்பிரமணிய ஐயர், செம்மங்குடி சீனிவாசய்யர் போன்றவர்கள் மனது வைத்தால் இரண்டு மூன்று வருஷங்களில் "தமிழ்க் கீர்த்தனங்களுக்கு இணையில்லை'' என்று செய்து விடலாம். ஸ்ரீ முத்தையா பாகவதர், டைகர் வரதாச்சாரியார், பாபநாசம் சிவன் ஆகியவர்களும் ஒத்துழைத்தால் காரியம் இன்னும் சுலபமாக முடிந்துவிடும்.

ஆனால் இந்த வித்வான்களெல்லாம் மனது வைக்கும்படியும் ஒத்துழைக்கும்படியும் யார் செய்யப் போகிறார்கள்? ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள்தான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நடத்தலாம்; வேறு யாரால் முடியப்போகிறது?

# சிதம்பரம் மகாநாடு

சிதம்பரத்தில் புதிதாக ஒரு சர்வ கலாசாலை ஏற்படுத்தும் பேச்சு முதன் முதலாக எழுந்தபோது தமிழ் அன்பர்கள் கொண்ட ஆனந்தத்துக்கு அளவில்லை. அது உண்மையில் தமிழ் சர்வகலாசாலையா யிருக்குமென்றும், தமிழ் மொழியும் தமிழ்க் கலையும் அங்கே தழைத்தோங்குமென்றும் எதிர்பார்த்தோம். போகப் போக இந்த ஆசை யெல்லாம் நிராசையாகுமோ என்ற பயம் உண்டாயிற்று. சில காலம் பலவேறு காரணங்களினால் சர்வகலாசாலை, 'சர்வ கலாட்டா சாலை'யாகவே ஆகியிருந்தது. 'தமிழ்' என்றால் 'இனிமை' என்று பொருள் சொல்வதுபோல, 'தமிழ்' என்றால் 'ரகளை' என்று அர்த்தம் கொள்ளும்படியான நிலைமை ஒரு சமயம் அங்கே ஏற்பட்டிருந்தது. மூவாயிரம் வருஷத்துக்கு முன்னால் தமிழர்கள் கல்யாணம் செய்துகொண்ட முறையைப் பற்றிக் கடுமையான வாதப் பிரதி வாதங்களும் வசைப் போர்களும் நடந்தன. அந்தக் காலத்திலெல்லாம் நான் எவ்வளவோ துக்கப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு சமயம், "நமக்கே இவ்வளவு வருத்தமாயிருக்கிறதே! இந்த சர்வகலா சாலைக்காக லட்சம் லட்சமாகப் பணத்தைக் கொடுத்து இன்னும் எவ்வளவோ முயற்சிகள் செய்த ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாருடைய உள்ளம் எவ்வளவு தூரம் புண்ணாகி யிருக்குமோ! '' என்று நினைத்ததும் உண்டு.

இந்த மனப் புண்களையெல்லாம் ஆற்றும்படியான காரியம்—சிதம்பரம் சர்வகலாசாலையைப் பற்றித் தமிழர்கள் எல்லாரும் பெருமை கொள்ளும் படியான காரியம்—சென்ற மாதத்தில் நடந்தேறியிருக்கிறது. தமிழுக்கும் தமிழ்க்

கலைக்கும் ஒரு பெரிய தொண்டைச் சிதம்பரம் சர்வ கலாசாலை செய்துவிட்டது. சிதம்பரம் சர்வகலாசாலை இந்தத் தொண்டை மேற்கொள்ளுவதற்குத் தூண்டுதலாக இருந்தவர் ராஜா அண்ணாமலைச் செட்டியார்தான் என்று சொல்லவேண்டியதில்லை. அவரைத் தவிர வேறு யாருக்கும் இந்த பிரம்மப் பிரயத்தனமான வேலையைத் தொடங்கத் தைரியம் வந்திராது. அவருடைய சொந்த முயற்சியும், ஆர்வமும் இருந்திராவிடில் இத்தனை சங்கீத வித்வான்கள் தமிழ் சங்கீத மகாநாட்டுக்கு வந்திருப்பார்கள் என்று ஒருநாளும் எதிர்பார்க்க முடியாது; மகாநாடு இவ்வளவு சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடந்திராது.

ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் சொந்த ஆர்வமே காரணமாக யிருந்தபோதிலும், காரியத்தைத் தமிழ் சர்வகலாசாலையின் மூலம் நடத்தி வைத்ததுதான் ரொம்பவும் பொருத்தமானது என்று சொல்ல வேண்டும். சர்வகலாசாலைக்கும் கௌரவம், தமிழுக்கும் கௌரவம், சங்கீதத்துக்கும் கௌரவந்தான்.

மகாநாட்டின் மூன்றாவது நாள் மத்தியானம் செட்டிநாட்டு ராஜாவின் சார்பாக சர்வகலாசலைக் காரர்கள் அளித்த விருந்தை அருந்திவிட்டு, தாம்பூல தாரணத்திற்காக ஒரு வட்டமேஜையைச் சுற்றி நாலைந்து பேர் உட்கார்ந்தோம்.

அப்போது ஸ்ரீ பொன்னையா பிள்ளை (பிரசித்தமான பரம்பரை சங்கீத குடும்பத்தைச் சேர்ந்தவர் வித்வான் பொன்னையா பிள்ளைதான்) சொன்னார்—"நீங்கள் இருவரும் வெகு காலமாகப் பிரயாசைப்பட்டுக் கொண்டிருந்த காரியம் இப்போது கை கூடுகிறது பார்த்தீர்களா?''

இது, டி.கே.சி. அவர்களையும், என்னையும் பார்த்துச் சொன்ன வார்த்தை;



"ஆமாம்; இப்படி யெல்லாம் நடந்து விடுமென்று நான் நினைக்கவே யில்லை. நினைக்க நினைக்க ஆச்சரியமாய்த்தா னிருக்கிறது'' என்று பதில் கூறினேன்.

"எனக்கும் ஆச்சரியமாய்த்தா னிருக்கிறது!'' என்றார் திருப்புகழ் மணி ஸ்ரீ டி. எம். கிருஷ்ணசாமி ஐயர். இப்படிச் சொல்லும்போது அருடைய குரலில் கேள்விக் குறி தொனிக்கவே, எல்லாரும் அவரைப் பார்த்தோம்.

"ஆமாம்; இதற்காக நீங்கள் ஆச்சரியப்படுவதைக் கண்டு எனக்கு ஆச்சரியமா யிருக்கிறது!'' என்றார் திருப்புகழ் மணி.

அதாவது தமிழ்நாட்டில் 'தமிழில் பாட்டுப்பாட வேண்டும்' என்று ஒரு கிளர்ச்சி, இதற்கு ஒரு மகாநாடு, இப்படி ஒரு மகாநாடு கூடிவிட்டதே என்று பிரமாதமாகச் சந்தோஷப்படுவது. இவை யெல்லாந்தான் திருப்புகழ் மணிக்குப் பெரிய ஆச்சரியமாகத் தோன்றின. "**தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்**'' என்ற வாக்கின்படி, சதா சர்வகாலமும் இசையும் தமிழும் தாமுமா யிருப்பவர் திருப்புகழ் மணி ஸ்ரீ டி. எம். கிருஷ்ணசாமி ஐயர். அவர் சங்கீதக் கச்சேரிகளுக்கு அதிகம் போவது கிடையாது. அப்படிப்பட்டவருக்கு, "தமிழிலே பாடவேண்டு மென்று ஒரு இயக்கமா? இதற்கு ஒரு மகாநாடா?'' என்று தோன்றியது இயற்கையே. சமுத்திரத்தில் வாழும் மீன் களுக்கு "உயிர்வாழ ஜலம் அவசியம்'' என்று தீர்மானிப் பதற்காக ஒரு மகாநாடு கூட்டினால் ஆச்சரியமா யிராதா?

ஆனால் டி.கே.சி. யையும் என்னையும் போன்றவர் களுடைய நிலைமை வேறு. நல்ல சங்கீதம் கேட்க வேண்டுமென்ற ஆசையுடன் பிரபல வித்வான்களின் கச்சேரிகளுக்குப் போகிறதும், அங்கே சங்கீத மெல்லாம் பிற பாஷை மயமாகவே இருப்பதைக் கண்டு வருத்தப்

படுவதுமாயிருந்தவர்கள் நாங்கள். நமது சங்கீதத்துக்கு இந்த அன்னிய பாஷை விலங்கிலிருந்து விடுதலையே கிடையாதோ என்று ஏங்கியதும் உண்டு. இதைப்பற்றிப் பிரஸ்தாபித்தாலே சிலர் பரிகாசம் செய்யத் தொடங்கினார்கள். "உங்களுக்குத் தெலுங்கின்மேல் என்ன துவேஷம்?'' என்று சிலர் கேட்டார்கள். இப்படி கேட்ட ஒரு நண்பரைப் பார்த்து, டி.கே.சி. திருப்பி ஒரு கேள்வி கேட்டார். "உங்களுக்கு கிரீக் பாஷை தெரியுமா?'' என்றார். "தெரியாது'' என்றார் நண்பர். "கிரீக் பாஷையின் மீது உங்களுக்கு என்ன, ஐயா, துவேஷம்?'' என்று கேட்டார் டி.கே.சி.

இப்படி யெல்லாம் பலவித எதிர்ப்புகளுக்கும் ஏமாற்றங்களுக்கும் உள்ளானவர்களுக்குச் சிதம்பரம் மகாநாடு ஒரு பிரமாதமான காரியமாகத் தோன்றியது இயற்கையே யல்லவா? ஆகவே, நாலு நாளும் இருந்து மகாநாட்டை நடத்திவைக்கும் நோக்கத்துடன் டி.கே.சி. முன்னதாகவே பிரயாணமாகிப் போய்விட்டார். அங்கிருந்து எனக்கு ஒரு கடிதமும் எழுதினார். "அரியக்குடி ராமானுஜய்யங்கார் தமிழ்க் கச்சேரி செய்து விட்டார்; செம்மை வைத்தியநாத பாகவதர் தமிழிலேயே பாடப்போகிறார்; இந்த ஆச்சரியங்களையெல்லாம் பார்க்கக் கொடுத்து வைக்காமல் சென்னையில் உட்கார்ந்திருக்கிறீர்களே?'' என்று படித்ததும், உடனே மூட்டை கட்டத் தொடங்கினேன்.

அன்று இரவு திருவனந்தபுரம் பாஸஞ்சர் வண்டி கூடத் தமிழிலேயே மூச்சு விட்டுக்கொண்டும் தமிழிலேயே தாளம் போட்டுக்கொண்டும் பிரயாணம் செய்தது. ஏனெனில், திருப்புகழ் மணி, ஸ்ரீ தண்டபாணி தேசிகர், ஸ்ரீமதி அலமேலு ஜயராமய்யர் ஆகியவர்களெல்லாம் அதே வண்டியில்தான் மறு நாள் தமிழோடு இசைபாடுவதற்கு பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள்.



காலை நாலு மணிக்கு ரயில் சிதம்பரம் ஸ்டேஷன் போய்ச் சேர்ந்தது. அந்த நேரத்தில் ரயிலில் வருகிறவர்களை அழைத்துப் போவதற்கென்று சர்வ கலாசாலை மனிதர்கள் வந்து காத்திருந்தார்கள். அவரவர்களையும் இருட்டில் தேடிப்பிடித்து வண்டியிலேற்றி அழைத்துப் போனார்கள். நாங்கள் தமிழுக்கு வந்த யோகத்தை எண்ணி மகிழ்ந்து கொண்டே போனோம்.

சர்வ கலாசாலையில் அதிதிக் கிரகத்தில் கொண்டு போய் இறக்கினார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம் பொழுது பல பல வென்று விடிந்தது. ஒரு அறையில் தனியாக ஒரு தம்புராவின் நாதம் கிளம்பிற்று. இன்னொரு அறையில் மிருதங்கத்தைத் தட்டிப் பார்க்கும் சப்தம் வந்தது. இன்னொரு மூலையிலிருந்து யாரோ பூபாள ராகத்தை வாய்க்குள்ளே முணுமுணுத்தார்கள். சமாசாரம் என்னவென்று விசாரித்ததில் காலை எட்டு மணிக்கே கச்சேரிகள் ஆரம்பமாகிவிடுமென்றும், அதற்காக அவரவர்களும் தயார் செய்து கொள்கிறார்களென்றும் தெரிய வந்தன. இரண்டு நாளாக இப்படித்தான். காலை எட்டு மணிக்குத் தமிழ்க் கச்சேரிகள் ஆரம்பமாகி இராத்திரி 9 மணிக்கு முடிகின்றன என்று சொன்னார்கள். "எல்லாரும் தமிழ் உருப்படிகள் தானே பாடுகிறார்கள்?'' என்று கேட்டேன். "அதற்குக்கூடச் சந்தேகமா? சில பாடகர்கள் பாடும்போது என்ன பாஷை என்று தெரிகிறதில்லைதான்; ஆனாலும் அவர்கள் தமிழ்தான் பாடியிருக்க வேண்டும்! இதிலெல்லாம் கொஞ்சம் பரஸ்பரம் நம்பிக்கை வேண்டாமா? நீங்களே சொல்லுங்கள்'' என்று பரிதாபமாகப் பதில் வந்தது.

"இரண்டுநாளும் இடைவிடாமல் தமிழ்ப் பாட்டுக்களைப் பாடுகிறார்களே? ஏராளமான உருப்படிகள் பாடியிருக்க வேண்டுமே?''

" 'சிதம்பரம் என மனங்களித்திட' ஏழு தடவை கேட்டதாக ஞாபகம்; இன்னும் பல உருப்படிகளும் பாடித் தான் இருக்க வேண்டும்.''

"கச்சேரிகள் எங்கே நடக்கின்றன? சபை எப்படி'' என்று கேட்டேன்.

"கச்சேரிகள் பட்டமளிப்பு மண்டபத்தில் நடக்கின்றன. கூட்டம் ஏராளம். மாணாக்கர்களே எழுநூறு, எண்ணூறு பேர். ஆகவே, உத்சாகம் ரொம்ப அதிகம். வித்வான்கள் பாடு கொஞ்சம் திண்டாட்டந்தான். நடுவில் நடுவில் பாடகர்களுக்குச் சபையோர் உத்தரவுபோட ஆரம்பித்து விடுகிறார்கள். நேற்றைக்குச் செம்பை வைத்தியநாத பாகவதர் ரொம்ப ஜோராகச் சமாளித்தார். சபையோர் கையைத் தட்டியபோது அவரும் சேர்ந்து கையைத் தட்ட ஆரம்பித்துவிட்டார்!''

"இரண்டு நாளாய்த் தமிழ்க் கச்சேரியாகவே நடப்பதில் யாருக்காவது அதிருப்தி உண்டோ? 'தெலுங்குப் பாட்டுப் பாடு' என்று யாராவது கேட்டார்களோ? என்று பயத்துடன் வினாவினேன். "அது மட்டும் இல்லை'' என்று பதில் கிடைத்ததும், தைரியம் வந்தது.

எட்டு மணிக்குப் பட்டமளிப்பு மண்டபத்துக்குப் போனோம். விஸ்தாரமான மண்டபம். இரண்டாயிரம் பேர் தாராளமாய்க் கொள்ளும். அழகோ சொல்லிவிட முடியாது. நடுவில் தூண் முதலிய தடைகள் இல்லாமல் நவீன வசதிகளுடன் அமைந்திருந்தது. மண்டபத்துக்கேற்ற அரங்கமேடை. பாடகர்கள் உட்காருமிடத்துக்கு மேலே தாழ்வாக ஒரு விதானம் மட்டும் கட்டியிருந்தால், கச்சேரி கள் இன்னும் நன்றாய்ச் சோபித்திருக்கும்.

எத்தனையோ பணச் செலவில் கட்டிய இந்த சர்வகலா மண்டபம் இப்போது உண்மையாகவே தமிழ்க்



கலையை வளர்ப்பதற்குப் பயன்படுகிறதே என்று குதூகல மடைந்தேன்.

நாகர்கோவில் ஸ்தாணு பாகவதரின் கச்சேரி அப்போது நடந்துகொண்டிருந்தது. பழைய காலத்து மனுஷர்; பழைய காலத்துப் பாட்டு. இந்தத் தள்ளாத வயதிலும் பாட்டில் ஜீவ களை ததும்பிற்று. ஒவ்வொரு சமயம் பாட்டின் புதிய அடியை ஆரம்பிக்கும்போது கல்லால மரத்தடியில் வீற்றிருக்கும் தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபமாக விளங்கினார். எதிரே உட்கார்ந்திருந்த ஸ்ரீ லட்சுமணப் பிள்ளை, முகத்தில் உத்சாகம் ததும்பத் தலையை ஆட்டி அனுபவித்ததைப் பார்த்ததும், அவருடைய கீர்த்தனங்களைத்தான் ஸ்ரீ ஸ்தாணு பாகவதர் பாடுகிறார் என்பது தெரிந்துபோயிற்று.

அடுத்தாற்போல் திருச்சி சகோதரர்களின் கச்சேரி. விறுவிறுப்பான பாட்டு; அபூர்வ சஞ்சாரங்கள். மூத்தவர் முகத்தை அசைப்பதேயில்லை. இளைய சகோதரர் தோள்களை ஒரு குலுக்குக் குலுக்க வேண்டியதுதான்; யாராவது 'பேஷ்!' என்று சொல்லிவிட்டால், அவருடைய முகத்தில் வெட்கமும் புன்னகையும் கலந்து போராடும்.

பிறகு, திருப்புகழ் மணி டி. எம் கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் அரை மணி நேரம் உணர்ச்சி ததும்பும் தமிழ்ப் பாடல்களைப் பொழிந்தார்கள்.

அப்புறம், பூதலூர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் கோட்டு வாத்தியத்தைத் தூக்கிக்கொண்டு மேடைக்கு வந்தபோது எல்லாருக்கும் ஒரே ஆச்சரியமாய்ப் போயிற்று. சாதாரணமாய்த் தமிழ்ப் பாட்டு இயக்கத்தைப் பரிகசிப் பவர்கள் "ஓகோ! புல்லாங்குழல் கச்சேரிகூடத் தமிழிலேயே நடந்ததோ? பிடிலும் தமிழ்ப் பாட்டுப் பாடிற்றோ? மிருதங்கமும் தமிழில்தான் அடித்தார்களோ?'' என்று கேட்பதுண்டு. அதற்குத் தகுந்தாற்போல் இந்தப்

பிராமணர் கோட்டு வாத்தியத்தைத் தமிழிலே வாசிக்க வந்து விட்டாரே என்று நான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கையில், சாஸ்திரிகள் கணீரென்று கமாக ராகத்தில் ஒரு தமிழ்க் கீர்த்தனத்தை எடுத்தார்; வாய்ப் பாட்டாகத்தான். சாரீரமாவது சாரீரம்! ரவையாவது ரவை! எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ என்று பூதலூர் கிருஷ்ண மூர்த்தி சாஸ்திரிகளைப் பார்த்துத்தான் சொன்னார்களோ, என்னவோ? இரண்டு மூன்று உயர்தரத் தமிழ் உருப்படிகள் (தமிழ் என்று நன்றாய்த் தெரியும்படி) பாடினார்; பாடிக்கொண்டே வாத்தியமும் வாசித்தார். பிறகு ஒரு தமிழ் விருத்தத்தை ராகமாலிகையில் பாடி உலுக்கித் தள்ளி விட்டார். உயர்ந்த தஞ்சாவூர் பாணி சங்கீதத்தைப் பொக்கிஷமாக வைத்துக் காப்பாற்றி வருகிறவர்களில், பூதலூர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளும் ஒருவர் என்று தெரிந்தது. இத்துடன் காலைக் கச்சேரிகள் முடிந்தன.

பிற்பகல் மூன்று மணிக்குப் பட்டமளிப்பு மண்டபத்தில் மறுபடியும் தமிழ்க் கச்சேரிகள் ஆரம்பமாயின. காலஞ் சென்ற ஸ்ரீ கோடீசுவர அய்யரின் அபூர்வ கீர்த்தனங்களை அவருடைய குமாரரும், சீடர் ஒருவரும் பாடினார்கள்.

இவர்களுக்குப் பிறகு, இரண்டு பெரிய பீரங்கிகளின் கச்சேரி. முதலில் ஸ்ரீ தண்டபாணி தேசிகர்; பிறகு ஸ்ரீ தியாகராஜ பாகவதர்.

தேசிகரின் தமிழ் இசையில் எனக்கு எப்போதும் மிகுந்த மதிப்பு உண்டு. அந்த மதிப்பு நேரில் கேட்டதில் பன்மடங்கு பெருகிற்று. கம்பீரமான சாரீரம்; ஒலிக் கருவி இல்லாமலே மண்டபம் முழுவதும் சென்று எதிரொலி செய்யும்படியான பெரிய குரல். அவ்வளவு பெரிய குரலில் சுகபாவமும் ததும்பிற்று.



ஸாஹித்யத்தின் சிறப்பைப் பூரணமாய் உணர்ந்து, இதயபாவத்துடன் பாடுவதில் தேசிகருக்கு நிகர் தேசிகர் தான் என்று சொல்ல வேண்டும். அவர் ஸ்வரம் பாடுவதில்லை; ராக விஸ்தாரங்களில் புகுந்து ஜால வித்தைகள் செய்வதில்லை. நேரே நெடுகப்பாடிக்கொண்டு போகிறார்; இன்பம் ததும்பும் செந்தமிழ்ப் பாடல்களையே பொறுக்கி எடுத்துப் பாடுகிறார்; தமிழ்ப் பதங்களைச் சுத்தமாக வாய் நிறைய உச்சரித்துப் பாடுகிறார்; ஒரு வார்த்தையாவது நம் காதில் விழாமல் தப்பிச் செல்வது கிடையாது.

ஒரு கீர்த்தனம், ஒரு விருத்தம்—இப்படியே மாற்றி மாற்றி இரண்டு மணி நேரம் அற்புதமாய்ப் பாடி வந்தார் தேசிகர். அவர் பாடிய அச்சுததாஸர் கீர்த்தனங்கள் ஸாஹித்யத்திலும் இசையிலும் வெகு உயர்தரமா யிருந்தன. கரகர ப்ரியாவில் 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' என்ற தேவாரத்தைப் பாடியபோது, எல்லாருடைய உள்ளமும் கனிந்து கண்ணீர் பெருகியே விட்டது. கச்சேரியை முடித்தபோது, "ஏன் முடிக்கிறார்?" என்று தோன்றியது.

இவருக்கு அடுத்தபடி ஓர் இளம் சங்கீத வித்வான் பாடப் போவதாக 'டைகர்' வரதாச்சாரியார் மேடையில் வந்து தெரிவித்தார். அந்த இளம் வித்வானுடைய பாட்டை நான் ஏற்கனவே கேட்டிருக்கிறேன். ரொம்ப உயர்ந்த பாட்டு ஆனாலும் இரண்டு டாக்கி நட்சத்திரங்களுக்கு மத்தியில் ஒரு சாதாரண பாடகரை கொண்டு விடலாமா. இப்படிப்பட்ட பிசகை 'டைகர்' செய்கிறார் என்று நினைத்தேன். கிழப் புலிக்குப் பெரிய பீரங்கிகளைக் கண்டு பயமில்லாமலிருக்கலாம். இளம் ஆட்டுக் குட்டியும் அப்படியிருக்க முடியுமா? ஆனால் அந்த இளம் வித்வான் நல்ல பாடகர் என்பதோடு, நல்ல புத்திசாலி என்றும் தெரியவந்தது. கூட்டத்தின் நோக்கத்தை அறிந்து கொண்டார்; வெறும் பாட்டு மாத்திரம் கேட்க அவர்கள் இப்போது தயாராயில்லை—பில்வ மங்களன், திருநீல

கண்டார், அம்பிகாபதி அசோக் குமார் எல்லாரையும் ஒரே தடவையாகப் பார்க்கவும், கேட்கவும் விரும்புகிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு, மேடைக்கு வர மரியாதையாக மறுத்து விட்டார்; வந்த தம்பூராவும் திரும்பிப் போய் விட்டது!

அப்புறம், ஸ்ரீ தியாகராஜ பாகவதர் வந்தார்; அதாவது, பாகவதருடைய ரூபத்தில் மேற்கூறிய கதாநாயகர்கள் எல்லாரும் வந்தார்கள்.

தேசிகருடைய கம்பீரமான சாரீரத்துக்குப் பிறகு, பாகவதருடைய இனிய குரல் எடுபடுவதற்குக்கூடக் கொஞ்சம் சிரமப்பட்டது. பத்து நிமிஷம் கழித்துத்தான் பாகவதரின் குரல் இனிமை வெற்றி யடைந்தது. இனிமை என்றால் எப்படி? அவர் பாடவே வேண்டாம்; குரல், தம்பூராவின் சுருதியுடன் கலந்து கார்வை கொடுத்துக் கொண்டிருந்தாலே போதும்; கேட்டுக் கொண்டேயிருக்கலாம். ஆனால் பாகவதர் அத்துடன் திருப்தியடையத் தயாராயில்லை, கச்சேரி பாணியில் ராக ஆலாபனம், கீர்த்தனம், நிரவல், ஸ்வரம்—இப்படிப் பாடிக்கொண்டு வந்தார். எல்லாம் அரை மணி நேரந்தான். அவ்வளவு நேரம் பொறுமையாயிருந்த சபையோர்கள், "போதும், ஐயா! கச்சேரிக் கடையைக் கட்டும்; டாக்கி பாட்டை எடுத்து விடும்'' என்று உத்தரவு போடத் தொடங்கினார்கள். பாகவதர் வேறு வழியின்றி, சபையில் கொஞ்சம் சங்கீத ரஸிகர்களா யிருந்தவர்களை ஒரு தடவை பரிதாபமாய்ப் பார்த்துவிட்டு, டாக்கிப் பாட்டுகளை எடுத்து விட்டார். ஒரு பாட்டு முடிந்ததும், "பிளேட்டைத் திருப்பு'' என்று மறுபடியும் உத்தரவு போட்டார்கள்; அப்படியே திருப்பினார். சபையோர் ஆரவாரித்து அக மகிழ்ந்தார்கள்.

பாகவதரின் இனிமை ததும்பும் குரலைக் கேட்ட பிறகு வேறு யாருடைய பாட்டையும் கேட்க நான் உண்மையிலேயே விரும்பவில்லை. யார் பாடப் போகிறார்



கள் என்று விசாரிப்பதற்குக் கூட இஷ்டப்படாமல் கிளம்பி விட்டேன்.

தமிழ் சங்கீத மகாநாடு வெற்றியுடன் நடந்தேறி விட்டது. அதனால் மிகச் சிறந்த பலன்கள் விளைந்துதானிருக்கின்றன. இயக்கத்துக்கே ஒரு முக்கியம் ஏற்பட்டு விட்டது. முதலாவது சிறந்த பலன், சங்கீத வித்வான்களையெல்லாம் ஒன்று சேர்த்து அவர்களுடைய ஒத்துழைப்பை இந்த இயக்கத்துக்குப் பெற்றது; இரண்டாவது பலன், தமிழ்ப் பாட்டுக்களையே முழுதும் பாடினாலும் தமிழர்கள் நிச்சயமாக ரஸிப்பார்கள் என்று ஏற்பட்டது மூன்றாவது பலன். ஆதிமுதல் இன்று வரையில் தமிழ் சாஹித்ய கர்த்தாக்களின் விரிவான ஜாபிதா ஒன்று டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் மூலம் கிடைத்தது நாலாவது பலன்.

இவ்வளவுடன் காரியமே நிறைவேறிப் போய் விட்டது என்று யாரும் சொல்லமாட்டார்கள். மகா நாடு காரியத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறது; அவ்வளவுதான். இனிமேல் காரியம் சித்தியாக வேண்டும். ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் எந்தக் காரியத்தை எடுத்தாலும் அதை நிறைவேற்றியே தீருவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகவே தமிழுக்கும் சங்கீதத்துக்கும் யோகம் இருப்பதாலேயே அவர் இந்தக் காரியத்தை மேற்கொண்டார் என்று கருத இடமிருக்கிறது. அவருடன் இந்த உயர்ந்த காரியத்தில் ஒத்துழைப்பது சங்கீத வித்வான்கள், தமிழன்பர்கள் எல்லாருக்கும் ஏற்பட்டிருக்கும் தலைசிறந்த கடமை என்றே சொல்லவேண்டும்.

# பயப்படவேண்டாம்!

ருஷியாவின்மேல் ஜெர்மனி படை எடுத்த செய்தியை அறிந்ததும், பிரசித்திபெற்ற ஆங்கில ஆசிரியரான பெர்னார்ட்ஷா ஒரு சொல் வெடியை எடுத்துப் போட்டார். "இனிமேல் பிரிட்டன் பேசாமல் தூங்கப் போகலாம். நாஜி ஜெர்மனியை இனி ஸ்டாலின் பார்த்துக் கொள்வார்!" என்றார். அந்த மாதிரி, தமிழ்ப்பாட்டு இயக்கத்தில் சம்பந்தப்பட்டவர்களும் இனிமேல் தூங்கப் போகலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. தமிழ்ப் பாட்டு இயக்கத்துக்கு விரோதமாக எப்போது எதிர்ப்புக் கூட்டங்கள் போட்டாகி விட்டதோ, அப்போது அதன் வெற்றியைப் பற்றிக் கவலையே வேண்டியதில்லை. தானே ஜயிக்கும் என்பது நிச்சயம். ஏழெட்டு வருஷமாகத்தான் சிலர் 'தமிழ்ப் பாட்டு' 'தமிழ்ப் பாட்டு' என்று கரடியாய்க் கத்திக்கொண்டு வந்தோமே, ஒரு எதிர்ப்புக் கூட்டமாவது நடந்ததா? கிடையாது. அது அதற்கும் உரிய காலம் வர வேண்டும்; வந்தால்தான் காரியத்துக்குப் பலம் ஏற்படும்; அப்போதுதான் எதிர்ப்புக் கூட்டங்களும் நடைபெறும்.

ஆகவே, இப்போது நம்முடைய கவலையெல்லாம் தமிழ்ப் பாட்டை எப்படி வளர்ப்பது என்பதன்று; அதை எதிர்க்கிறவர்களின் பயங்களை எப்படிப் போக்குவது என்பதுதான். எதிர்ப்புச் செய்கிறவர்கள் வெறும் வம்புக்காக எதிர்க்கிறவர்கள் அல்ல என்பதைக் கவனிக்க வேண்டும். உதாரணமாக, ஸ்ரீ டி. எல். வெங்கட்ராமய்யரை எடுத்துக் கொள்ளலாம். அவருடைய உயர்ந்த சங்கீத ஞானத்தையும், பக்தியையும் ஏழெட்டு வருஷமாக நான் அறிந்திருக்கிறேன். இவ்வருஷ ஆரம்பத்தில் அவர் மியூஸிக் அகாடமியிலிருந்து ராஜினாமா செய்த விவரம் அறிந்த



போது, "அகாடமி கொடுத்து வைத்தது அவ்வளவுதான்!" என்று எண்ணினேன். அத்தகையவர் வீண் வம்புக்காக இந்தச் சண்டையை ஆரம்பித்திருக்கிறார் என்று ஒரு நாளும் சொல்வதற்கில்லை. உண்மையான பயம் ஏற்பட்டிருப்பதினால்தான் ஆரம்பித்திருக்கிறார்.

எதிர்ப்பு இயக்கத்தில் இன்னொரு பிரமுகர் ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார். இவருடைய எதிர்ப்பு எந்த இயக்கத்துக்குமே ஒரு பெரிய லாபம் என்று சொல்ல வேண்டும். ராஜாஜியிடமும் காங்கிரஸிடமும் இவருக்கு எவ்வளவோ அபிமானம் உண்டு. ஆனாலும், காங்கிரஸ் மந்திரி சபையை இவர் எதிர்த்து வந்தார். காரணம், எவ்வளவு நல்ல விஷயமா யிருந்தாலும் எதிர்க்கட்சி பேசினால்தான் நியாயா நியாயங்கள் சரியாக வெளியாகு மென்றும் எண்ணமாய்த்தான் இருக்கவேண்டும். எனவே, தமிழ்ப் பாட்டு இயக்கத்தை எதிர்க்கிறாரென்றால், அவருடைய நோக்கத்தைப் பாராட்டி ஆட்சேபங்களுக்குச் சமாதானம் சொல்ல நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இன்னும், மேற்படி, எதிர்ப்புக் கூட்டங்களில் பரூர் சுந்தரமய்யர், வீணை சுப்பிரமணிய அய்யர் இவர்கள் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள். "வாய்ப்பாட்டு வித்வான்கள் ஆட்சேபியாதபோது பிடில் வித்வானுக்கும் வீணை வித்வானுக்கும் என்ன வந்தது?" என்று கேட்கத் தோன்றலாம். ஆனால் இந்த வித்வான்களும் வம்புக்காகச் சண்டை பிடிக்கிறவர்கள் அல்ல; சங்கீதக் கலையிலுள்ள அளவு கடந்த அபிமானத்தினால், அதற்கு ஏதாவது கேடு வந்துவிடுமோ என்ற பயத்தினால்தான் ஆட்சேபிக்கிறார்கள். எனவே, இவர்களுடைய பயங்களைப் போக்க முயற்சி செய்ய வேண்டியது இயக்கத்தில் ஈடுபட்டவர்களின் கடமை. அதற்குப் பதிலாக, "கருப்புக் கொடி ஊர்வலம் நடத்துவோம்," "கச்சேரியில் மறியல் பண்ணுவோம்" என்றெல்லாம் அரசியல் கிளர்ச்சி முறையைக் கையாள ஆரம்பித்தால், காரியம் கெட்டுப் போகுமே தவிர வேறு

பயன் விளையாது. இது சங்கீத வித்வான்களுடைய மனப் பூர்வமான ஒத்துழைப்புடன் ஆக வேண்டிய காரியம்; பலவந்தத்தினால் ஆகக்கூடிய காரியம் அன்று.

"குதிரையைத் தண்ணீர்த் துறைக்குக் கொண்டு போகலாம்; ஆனால், தண்ணீர் குடிக்கச் செய்ய முடியாது'' என்ற முதுமொழியை ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பூர்வ பீடிகையுடன் எதிர்ப்புக் கூட்டங்களிலிருந்து வெளியாகியிருக்கும் சில முக்கிய பிரச்னைகளைக் கவனிப்போம்:

### 1. 'கர்நாடக சங்கீதம்' என்பது எந்த நாட்டுக்குரியது?

தமிழ் நாட்டுக்குத்தான் உரியது என்பதில் சந்தேகமே யில்லை. சிலப்பதிகார காலத்துக்கு முன்னாலிருந்து இரண்டாயிரம் வருஷமாகத் தமிழ் நாட்டில் தலைமுறை தலைமுறையாய் வளர்ந்த சங்கீதந்தான் கர்நாடக சங்கீதம். "தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்'' என்று தமிழையும் இசையையும் சேர்த்து வளர்த்த பெரியார்கள் இந்நாட்டில்தான் வாழ்ந்தனர்.

ஆந்திர நாட்டிலோ, கன்னட தேசத்திலோ இன்று இந்த சங்கீதம் மேன்மை யடைந்திருக்கவில்லை; தமிழ் நாட்டிலேதான் உன்னத மடைந்திருக்கிறது. கர்நாடக சங்கீதம் தமிழ் சங்கீதமே என்பதற்கு இதுவே அத்தாட்சி. பின் 'கர்நாடக சங்கீதம்' என்று ஏன் பெயர் வந்ததென்றால், பாரத நாட்டுக்கு 'இந்தியா' என்று பெயர் வந்தது போல்தான். கிரேக்கர்கள் பாரத தேசத்துக்குள் நுழைந்ததும் முதலில் ஸிந்து நதியைக் கண்டார்கள்; தேசத்துக்கே 'ஸிந்து' என்று பெயர் வைத்தார்கள். அது 'இந்தியா' என்று மருவி வழங்குகிறது. அதுபோலவே, வட நாட்டார் தெற்கத்தி சங்கீதத்தைக் குறிப்பிடும்போது தங்களுக்குச் சமீபத்திலுள்ள கர்நாடக தேசத்தின் பெயரால் குறிப்பிட்



டார்கள். அதனால்தான் கர்நாடக சங்கீதம் என்று பெயர் வந்தது.

"அப்படி இல்லை; ஸ்ரீ புரந்தரதாஸர், கன்னட பாஷையில் கீதங்களும் தேவர் நாமாக்களும் பாடிய பிறகு தான் கர்நாடக சங்கீதம் ஏற்பட்டது'' என்றே வைத்துக் கொள்வோம். அதிலிருந்து ஏற்படுவதென்ன? ஒன்றுமே யில்லை. அதற்காக தியாகராஜ ஸ்வாமிகளும் தீக்ஷிதரும் கன்னடத்தில் கீர்த்தனங்களை இயற்றவில்லை; தெலுங்கிலும், ஸம்ஸ்கிருதத்திலுந்தான் இயற்றினார்கள். ஆகவே, தமிழர்கள் தமிழ்ப் பாட்டுக்கள் கேட்பதில் எவ்விதத் தவறுமில்லை.

### 2. சங்கீதத்துக்கு வார்த்தை அவசியமா, இல்லையா?

மிகவும் உயர்ந்த சங்கீதத்துக்கு வார்த்தைகள் வேண்டியதில்லைதான். வண்டின் ரீங்காரம், கோகிலத்தின் இன்ப கீதம், கிளியின் இனிய மழலை, இலைகளின் சல சலப்பு ஒலி, மலைவீழருவியின் மதுரகானம்—இப்படிப் பட்ட சங்கீதத்துக்கு வார்த்தைகள் நிச்சயம் தேவையில்லை. ஆனால், இந்த ஸ்வச்சமான இயற்கை சங்கீதத்தை அனுபவித்துப் பூரண திருப்தியடைய நம்மில் அநேகரால் முடியவில்லை. முடிந்தால் சங்கீத சபைகளுக்கு வர மாட்டோம்; நெருக்கி யடித்துக்கொண்டு நாலு மணி நேரம் வியர்க்க விறு விறுக்க உட்கார்ந்திருக்க மாட்டோம்.

ஏன்? தியாகய்யரும் தீக்ஷிதருமே வார்த்தையில்லாத சங்கீதத்துடன் திருப்தியடைய வில்லையே! அவர்கள் அவ்விதம் திருப்தியடைந் திருந்தால் அவர்களுடைய அற்புத ஸாஹித்தியங்கள் நமக்கு எவ்விதம் கிடைத்திருக்கும்?

ஆகவே, இயற்கை சங்கீதத்தையே ஸ்வச்சமாக அனுபவிக்கக்கூடிய மகான்கள் அனுபவிக்கட்டும். நாம்

தியாகய்யர், தீக்ஷிதர் போன்றவர்களின் கட்சியிலேயே இருந்து விட்டுப் போகலாம்.

**3. கீர்த்தனங்களில் ராக பாவம் மட்டுந்தான் அவசியமா, இருதய பாவத்துக்கும் இடம் உண்டா?**

துணியை மாட்டுவதற்கு எப்படிக் கோட் ஸ்டாண்டை உபயோகிக்கிறோமோ, அதேமாதிரிதான் வர்ண மெட்டுக்களைத் தொங்கவிடுவதற்குக் கீர்த்தனங்களிலுள்ள வார்த்தைகளும் உபயோகமாகின்றன என்பது ராக பாவக்காரர்களின் கட்சி. இப்படிச் சொல்லுகிறவர்கள் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் போன்ற பெரியோர்களைப் பரிகசிக்கிறார்களென்றே ஏற்படும். அவர்கள் பகவானிடம் பக்திகொண்டு உருகிப் பாடினார்கள் என்பதெல்லாம் பொய்யா? வர்ண மெட்டுக்களைத் தொங்கவிடுவதற்குத் தானா அவர்கள் ஸாஹித்யம் செய்தார்கள். இப்படிச் சொல்லும் பாதகத்தைச் செய்ய நான் தயாராயில்லை. அந்தப் பெரியார்கள் தங்கள் இருதயத்தில் பொங்கிவந்த உணர்ச்சிகளைப் பாட்டுக்களாகப் பொழிந்தார்களென்று தான் நான் சொல்வேன். சங்கீதக் கலையில் ஊறியவர்களாதலால் அவர்களுடைய இருதய உணர்ச்சிகளை வெளியிடுவதற்கு வெவ்வேறு ராகங்கள் நான் முந்தி, நீ முந்தி என்று ஓடிவந்து ஒத்துழைத்தன. ஆதலின், கீர்த்தனங்களிலுள்ள அர்த்த பாவங்களை அறிந்து உணர்ச்சியுடன் பாடுவதும் அதே உணர்ச்சியுடன் கேட்பதுந்தான் தியாகய்யர் முதலிய மகான்களுக்கு நாம் மரியாதை செய்வதாகும். வார்த்தைகள் வெறும் ராகத்தை மாட்டுகிற ஆணிகள்தான் என்றால், அதற்கு ஸ்வரங்களே போதுமே? அர்த்தந் தெரியாத வார்த்தைகள்தான் என்னத்திற்கு?

"ஆமாம்: வார்த்தைகள் வேண்டியதில்லைதான். சங்கீத வாத்தியங்களைக் கேட்டு அநுபவிக்கிறோமில்லையா" என்று கேட்கப்படுகிறது.



"வாத்தியங்கள் என்னதான் கேட்டாலும், வாய்ப்பாட்டில் உண்டாகும் ஆனந்தம் கிட்டுவதில்லை" என்பதுதான் பதில். சங்கீதத்தின் ஜீவன் பூரணமாய்ப் பொலிவது வாய்ப்பாட்டிலேதான். வீணை தனம்மாள் அறுபது வயதாகித் தள்ளாமை அடைந்த பிறகும், நடுங்கிய குரலிலே, "குலத்தரும..." என்றெல்லாம் பாடிய காரணம் என்ன? அப்போது நம் கண்களில் ஜலம் துளித்த காரணந்தான் என்ன?

உண்மையில் ரொம்ப ரொம்ப அதிசயமான விஷயம் என்னவென்றால், சங்கீதத்துக்கு வார்த்தையே அவசியமில்லை யென்பவர்கள் தமிழ்ப் பாட்டு இயக்கத்தை எதிர்ப்பதுதான். அவர்களுக்குத்தான் வார்த்தையே வேண்டாமே? எந்தப்பாஷையில் பாடினால் இவர்களுக்கு என்ன? ராகபாவத்தையும் தாளக் கட்டையும் மட்டும் அநுபவித்து விட்டுப் போகலாமே? தமிழ் வார்த்தையைக் காதில் கேட்பதற்கே நாராசமாயிருக்கிறதா, என்ன?

**4. சங்கீதக் கலையின் பூரண ஆனந்தத்தை வேறு பாஷைப் பாட்டுக்களின் மூலம் அநுபவிக்க முடியுமா?**

முடியவே முடியாது. நம்மைப்போன்ற சாதாரண மனிதர்களைத் தள்ளுங்கள்; டாகூர், பாரதி போன்ற மகான்களால் கூட முடியவில்லை! இதை அவர்கள் ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் கீர்த்தனங்களை ரொம்பவும் நாம் அநுபவிக்கிறோம் என்பது உண்மைதான்; அவற்றிலுள்ள வேறு உயர்ந்த அம்சங்களுக்காக அநுபவிக்கிறோம். ஸ்வாமிகளே தமிழில் கீர்த்தனங்கள் பாடியிருந்தால் இன்னும் அதிகமாய்த்தான் அநுபவிப்போம்; சந்தேகமில்லை.

**5. தெலுங்குதான் சங்கீத பாஷையா? தமிழ் சங்கீதத்துக்கு இசைந்த பாஷை இல்லையா?**

இந்தக் கேள்விக்கு மட்டும் கோபம் வராமல் பதில் சொல்வது கடினந்தான். எனக்குத் தமிழ்தான் மற்ற எந்த பாஷையைக் காட்டிலும் இனிய பாஷையாகவும் சங்கீதத்துக்கு ரொம்பவும் இசைந்ததாகவும் தோன்றுகிறது. தெலுங்கு பாஷையில் அவ்வளவு அருமையான கீர்த்தனங்களைச் செய்தது அய்யர்வாளின் தெய்விக சக்திக்கு அறிகுறி. மற்றபடி தெலுங்கு பாஷையின் விசேஷம் ஒன்றுமில்லை.

தமிழ், சங்கீதத்துக்கு எடுத்த பாஷைதானா என்று சந்தேகப்படுகிறவர்கள் முதலில் கொஞ்சம் தமிழ் படிக்கட்டும்; முக்கியமாக, கம்பனையும், பாரதியையும், தேவார திருவாசகங்களையும், திருவாய் மொழியையும், அருட்பாவையும் படிக்கட்டும். பிறகு, சொல்லட்டும்.

**6. தமிழ்ப் பாட்டுக் கிளர்ச்சியினால் சங்கீதக் கலைக்கு ஆபத்து வந்துவிடுமா?**

அதாவது, கர்நாடக சங்கீதம் மட்டமாய்ப் போய் விடுமோ?

ஒருநாளும் இல்லை. ஏனெனில் சங்கீத வித்வான்களை நாம் தமிழ்ப் பாட்டுப் பாடச் சொல்லும் போது சங்கீத மேன்மை பொருந்திய தமிழ்ப் பாட்டுக்களைத் தான் கேட்கிறோம். கச்சேரி முழுவதும் துண்டு துக்கடாக்களாகவும், தெம்மாங்கு கும்மியாகவும் பாடச் சொல்லவில்லை. இப்படிப்பட்ட பாட்டுக்களே போதுமென்றால், சங்கீத வித்வான்களிடம் போகவேண்டியதே இல்லை; வேறு இடங்கள் இருக்கின்றன.

உயர்ந்த பாணியில் அமைந்த தமிழ்க் கீர்த்தனங்களைத்தான் வித்வான்களிடம் எதிர்பார்க்கிறோம். மகா



நாடுகள் கூட்டுவது, ஸாஹித்யப் பரிசுகள் ஏற்படுத்துவது எல்லாம் இதற்காகத்தான்.

ஆகையால், கர்நாடக சங்கீதத்துக்கு நிச்சயமாக ஆபத்து இல்லை.

**7. தமிழில் உயர்ந்த சங்கீதத்துக்குரிய ஸாஹித்யங்கள் இல்லையா?**

இதற்கு "இல்லை'' என்று பதில் சொல்லுகிறவர்களிடம், "பதம்'' என்பதாகக் கேள்விப்பட்டதுண்டா என்று கேட்க வேண்டும். பதங்களிலேதான் கர்நாடக சங்கீதம் உச்ச நிலையை எட்டியிருக்கிறது என்று சங்கீத பரிச்சயம் உள்ளவர்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டே தீருவார்கள். "பதங்கள்'' தமிழில் இருக்கின்றன; ஏராளமாய் இருக்கின்றன; அவற்றைச் சரியாய்க் கையாண்டு பாடாத குற்றந்தான்.

"கீர்த்தனங்களும் எவ்வளவோ தமிழில் இருக்கின்றன; மகா வைத்தியநாதய்யர் போன்ற வித்வான்கள் எல்லாம் பாடிக்கொண்டிருந்தார்கள்'' என்று தமிழ்த் தாத்தா டாக்டர் சாமிநாதய்யர் போன்றவர்கள் தெரிவிக்கிறார்கள். இக்காலத்துப் பெரிய வித்வான்கள் அவைகளைக் கச்சேரிகளில் பாடிக் கேட்ட பிறகுதான், "தமிழில் நல்ல ஸாஹித்யம் இல்லை'' என்று இக்காலத்து ரஸிகர்கள் தீர்மானிப்பது நியாயமாகும். முன்னாலேயே "இல்லை'' என்று முடிவு செய்வது நியாயமாகாது.

**8. தமிழில் நல்ல ஸாஹித்யம் இருந்தால், தானே பிரகாசிக்காதா? பிரசாரம் என்னத்திற்கு?**

"நல்ல சரக்காயிருந்தால் தானே விலைபோகும்'' என்பது எப்போதும் உண்மைதானா? மார்பிலே கையை வைத்துக்கொண்டு சொல்லுங்கள்.

தீக்ஷிதர் கிருதிகள் ரொம்ப, ரொம்ப உயர்ந்த சரக்குத் தான். ஆனால் எத்தனை பேர் பாடுகிறார்கள்! அதற்குப் பிரசாரம் தேவையா யிருக்கிறதோ, இல்லையோ?

ஸ்வாதித் திருநாள் கீர்த்தனங்களைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. ஆனாலும் அவை உயர்ந்த கீர்த்தனங் களாயிருப்பதினால்தான் வித்வான்கள் இப்போது பாடத் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால், இரண்டு வருஷத் துக்கு முன்பு வரையில் ஸ்வாதித்திருநாள் கீர்த்தனங்கள் ஏன் வெளிவராம லிருந்தன? இப்போது ஏன் வெளிவந் திருக்கின்றன?

நல்ல சரக்காயிருந்தாலும் சிலசமயம் பிரசாரம் வேண்டியதுதான், ஸ்வாமி, வேண்டியதுதான்!

**9. தமிழ் ஸாஹித்யங்களுக்குப் பரிசு கொடுப்பதெல்லாம் என்னத்திற்கு? தியாகராஜ ஸ்வாமிகளுக்கு யார் பரிசு கொடுத்தார்கள்?**

தியாகராஜரைப் போன்ற மகா ஸாஹித்ய கர்த்தா வுக்குப் பரிசு வேண்டியதில்லைதான். அடுத்த படியிலுள்ள வர்களை உற்சாகப்படுத்த இதுபோன்ற தூண்டுதல்கள் அவசியம்.

தியாகராஜர் ஸாஹித்யம் பண்ணிவிட்ட படியால் வேறொருவரும் செய்யக்கூடாது என்பதில்லையே! ராமநாதபுரம் சீனிவாசய்யங்கார், பட்டணம் சுப்பிரமண்ய ஐயர் முதலியோர் ஸாஹித்யம் செய்தார்களோ, இல்லையோ? இலக்கிய உலகில், "எழுதினால் டாகூரை யும், பாரதியையும்போல் எழுத வேண்டும்; இல்லா விட்டால் எழுதவே கூடாது'' என்று சொன்னால் ஒப்புக் கொள்ளுவார்களா?

"பத்திரிகை நடத்தினால் 'ஹிந்து' பத்திரிகையைப் போல் நடத்தவேண்டும் இல்லாவிட்டால் நடத்தவே கூடாது'' என்று சொன்னால்தான் ஒப்புக் கொள்ள முடியுமா?



இரண்டாந்தர, மூன்றாந்தர மனிதர்களுக்கும் முயற்சி களுக்கும் உலகத்திலே இடம் இருந்துதான் தீரவேண்டும்.

**10. தமிழ்ப் பாட்டுக் கிளர்ச்சியினால் தியாகய்யர்–தீக்ஷிதர் கிருதிகளுக்கு ஆபத்து வருமா?**

இந்தக் கடைசிக் கேள்விதான் முக்கியமான கேள்வி. உண்மையில், இந்த பயத்தினால்தான் எதிர்ப்புக் கூட்டங் கள் நடக்கின்றன என்று கருதுகிறேன்.

தெய்வ சாந்நித்யம்பெற்ற தியாகய்யர் தீக்ஷிதர் கிருதி களுக்கு ஒருநாளும் அழிவு வராது என்பது என் பரிபூரண நம்பிக்கை. பிரசாரமும், சபைக் கட்டும் யாருக்காவது அவசியமில்லை யென்றால், அவர்களுக்குத்தான்.

ஆனாலும், பயம் ஏன் ஏற்பட்டது? சிதம்பரம் மகா நாட்டில் நிறைவேறிய ஒரு தீர்மானத்தினால்தான். "தமிழ் நாட்டில் நடக்கும் சங்கீதக் கச்சேரிகளில் **பெரும்பாலும்** தமிழ்ப் பாட்டுக்களாய்ப் பாடும்படி வித்வான்களைக் கேட்டுக்கொள்கிறோம்'' என்பது தீர்மானம். இந்தப் பயங்கரமான தீர்மானந்தான் இவ்வளவு பீதிக்கும் காரணம்!

நானும் இருபது வருஷமாக எவ்வளவோ அரசியல் மகாநாடுகள் பார்த்திருக்கிறேன்; இலக்கிய மகா நாடுகள்—சங்கீத மகாநாடுகள் பார்த்திருக்கிறேன். அவற்றில் நிறை வேறிய தீர்மானங்கள் எல்லாம் காரியாம்சத்தில் நிறைவேறி யிருந்தால், நமது தேசமே இப்போது உருத்தெரியாமல் மாறி சுவர்க்க பூமியாகியிருக்கும்! இதை நினைக்கும்போது, ஒரு வெறுந் தீர்மானத்தினால் இவ்வளவு பீதி உண்டாகி விட்டது எனக்கு ஆச்சரியமாய்த்தா னிருக்கிறது.

சிதம்பரம் மகாநாட்டுத் தீர்மானம் உடனே பரிபூரண மாக நிறைவேறி விடுவதாக வைத்துக் கொள்வோம், அதனால் என்ன நடந்துவிடும்?

ஒரு வித்வான் கச்சேரியில் பத்துப் பாட்டுப் பாடினால் ஆறு பாட்டு தமிழில் இருக்கலாம்.

ஸ்ரீ. டி. எல். வெங்கட்ராமய்யர் தமிழ்ப்பாட்டே கூடா தென்று சொல்லவில்லை. "நடுவில் நடுவில் தமிழ்ப் பாட்டுப் பாடினால் நன்றாய்த்தா யிருக்கும்'' என்று சொல்கிறார். அதாவது அவர் பத்து உருப்படிகளில் நாலு உருப்படி தமிழா யிருக்கலாம் என்கிறார்.

வித்தியாசமெல்லாம் இரண்டு பாட்டில்தான்! தலைக்கு ஒன்றாய் வைத்துக்கொண்டு, ஐந்தும் ஐந்துமாகச் செய்துவிட்டால் போகிறது! இதற்குத்தானா இவ்வளவு காரசாரமான விவாதங்கள், கிளர்ச்சிகள், கூட்டங்கள், எல்லாம்?

ஒரு விஷயம் நிச்சயம். தமிழ்ப் பாட்டுப் பாடவேண்டு மென்று சொல்லுகிறவர்கள், மட்டமான தமிழ்ப் பாட்டுக் களைக் கேட்கவில்லை. உயர்தரமான தமிழ்க் கீர்த்தனங்கள் தான் கேட்கிறார்கள். அப்படிப்பட்ட கீர்த்தனங்களை வித்வான்கள் பாடம் செய்து பழக்கத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறார்கள். இது உடனே நடந்துவிடாது. கொஞ்சங் கொஞ்சமாகத்தான் நடக்கு மென்பது எல்லாருக்கும் தெரியும்.

தனித் தமிழ்ப் பாட்டுக் கச்சேரிகள் ஏற்படுத்தும் நோக்கமும் இதுவேதான். அதாவது சங்கீத வித்வான்கள் உயர்ந்த தமிழ்ப் பாட்டுக்களைக் கற்றுப் பழக்கத்துக்குக் கொண்டுவர ஒரு தூண்டுகோலா யிருக்கட்டுமென்றுதான். இது பிரசார நோக்கத்துடன் ஏற்படுத்துவதே தவிர, எல்லா சங்கீதக் கச்சேரிகளிலும் தெலுங்கு ஸம்ஸ்கிருதப் பாட்டுக்



களை அடியோடு நீக்கிவிட வேண்டுமென்று யாருமே சொல்வதாகத் தெரியவில்லை. அந்த மாதிரி நிலைமை ஏற்படப்போகிறதுமில்லை. தெய்விகம் வாய்ந்த தியாகராஜ கிருதிகளுக்கு ஒருநாளும் பிரபலத்வம் குறைந்துவிடாது.

அப்படிப்பட்ட நிலைமை ஒருவேளை எப்போதாவது ஏற்பட்டுவிட்டால், அப்போது தனித் தெலுங்குக் கச்சேரி கள் ஏற்படுத்தியும், வேறு விதங்களிலும் தியாகராஜ கிருதிகளைப் பாதுகாக்க முயற்சி செய்யலாம். யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். இப்போது அநாவசியமாக இந்த எதிர்ப்புக் கிளர்ச்சி வேண்டியதில்லை; "தமிழ் நாட்டில் தமிழுக்கு விரோதமாக ஒரு கிளர்ச்சி'' என்ற கெட்ட பெயரும் வேண்டியதில்லை.



# தேவகோட்டை மகாநாடு

ஒரு சமயம் தமிழ் நாட்டாரின் கண்களும் கவனமும் இரண்டு கோட்டைகள் மேலிருந்தன. ஒன்று மாஸ்கோ கோட்டை; இன்னொன்று தேவகோட்டை.

மாஸ்கோ கோட்டையின்மேல் ஜெர்மனிக்காரர்கள் போய் முட்டிக்கொண்டு அநியாயமாய்ப் பிராணனை விடுகிறார்கள்.

ஆனால் தேவகோட்டையையோ தமிழ் சங்கீதக்காரர்கள் வெகு சுலபமாய்ப் பிடித்துவிட்டார்கள். உண்மையில், அங்கே எதிர்ப்பு என்பதே கிடையாது. தேவகோட்டைக்காரர்கள் எல்லாருமே ஐந்தாம் படைக்காரர்களாகிக் கோட்டை வாசலைப் பகிரங்கமாய்த் திறந்து விட்டுவிட்டார்கள்! திறந்து விட்டதோடு இல்லாமல் வரவேற்பும் அளித்தார்கள்.

* * * * *

எந்த ஒரு முக்கியமான பிரச்னையைப் பற்றியும் பொது ஜனங்களின் மனதை உள்ளபடி அறிந்துகொள்ள வேண்டுமானால் அதை வெளியூர்களுக்குச் சென்றுதான் தெரிந்துகொள்ளவேண்டும். சென்னையிலிருந்து பார்த்தால் (கூவம் நதியின் மகிமைதானோ என்னமோ?)—எல்லாம் தலைகீழாகத் தோன்றுகிறது. ஓர் உதாரணம் சொல்லுகிறேன். உண்மையாக நடந்த சம்பாஷணை இது:—

"ஏன், ஸார்! உங்கள் தமிழ் சங்கீதம் எப்படியிருக்கிறது?"

"ரொம்ப நன்றாய்த்தா னிருக்கிறது."



"ஆமாம்; 'தமிழ் சங்கீதம்'' என்கிறீர்களே? பாட்டு மட்டுந்தான் தமிழில் பாடவேண்டுமா? பைரவி, காம்போதி ராகங்களைக்கூடத் தமிழில் பாடவேண்டுமா?"

"வேண்டாம், வேண்டாம்; பாட்டுக்களை மட்டும் தமிழில் பாடினால் போதும். ராகங்களை பேஷாய்த் தெலுங்கிலேயே ஆலாபனம் செய்யட்டும்; இல்லை—கன்னடம், மலையாளம், துளுவம், புஷ்டு, லாடின் முதலிய பாஷைகளில் வேணுமானாலும் சக்கைப் போடு போடட்டும்."

"இருந்தாலும், நீங்கள் இந்த இயக்கத்திலே சேர்ந்திருக்கக் கூடாது, ஸார்!"

"நான் புதிதாய்ச் சேரவில்லையே! ஏழெட்டு வருஷமாய் இதைத்தானே சொல்லிக் கொண்டிருக்கிறேன்?"

"அப்போது சொன்னதெல்லாம் சரி; இப்போது சொல்லலாமா?"

"இப்போது என்ன விசேஷம் தெரியவில்லையே? இப்போது தமிழ்ப் பாட்டுப் பாடினால் ஜெர்மனிக்காரனுக்கு ஒரு வேளை ஒத்தாசையாகி விடுமோ?"

"இல்லை சார்! குமார ராஜா முத்தையா செட்டியாரும் நீங்களும் ஒரே கட்சியைப் பேசுகிற தென்றால், அது நன்றாயிருக்கிறதா?"

"மன்னிக்க வேண்டும்; ரொம்பநாளாய் உங்களை ஒரு சமாசாரம் கேட்கவேண்டு மென்றிருந்தேன். நீங்கள் கோவிலுக்குப் போகிற வழக்கம் உண்டோ?"

"உண்டு!"

"அடாடா! கோவிலுக்கா போகிறீர்கள்? போகவே கூடாது, ஸார்!"

"ஏன் போகக் கூடாது?''

"குமாரராஜா முத்தையா செட்டியார் கோவிலுக்குப் போகிறாராம் ஸார்! குமாரராஜாவும் கோவிலுக்குப் போகிறது. நீங்களும் போகிறது என்றால் அது நன்றா யிருக்குமா, ஸார்? கொஞ்சங் கூடச் சரியில்லை, ஸார்!''

உண்மையில், குமாரராஜா கோவிலுக்குப் போவ துண்டா என்பது எனக்குத் தெரியாது. விவகாரத்துக்காகத் தான் சொன்னேன். இந்த சம்பாஷணையிலிருந்து சென்னையில் எந்த விஷயத்தையும் எப்படிக் கோணலாகப் பார்க்கிறார்கள் என்பது நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். ஆனால், தேவகோட்டையில் எப்படி? தமிழ் இசை மகா நாட்டை தேவகோட்டையில் கூட்டியவர்கள் பரிபூரண காங்கிரஸ்வாதிகள்; தீவிர தேசியப்பற்றுள்ள வாலிபர்கள். மகாநாட்டின் காரியதரிசி ஸ்ரீ. டி. ஆர். அருணாசலம் சத்தியாக்கிரஹ இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறைவாசம் செய்துவிட்டுத் திரும்பிவந்தவர். அப்போது அலிபுரம் சிறையிலிருந்த ஸ்ரீ. சா. கணேசன், இரும்புக் கம்பிகளுக்குள்ளிருந்து, மகாநாட்டுக்கு ஒரு உருக்கமான செய்தி அனுப்பியிருந்தார்.

## ஆரம்ப வெற்றி

எத்தனையோ நூற்றுக் கணக்கான மகாநாடுகள் நாட்டில் நடக்கின்றன. அவையெல்லாம் "வெற்றிகரமாக நடந்தேறின'' என்று பத்திரிகையில் படிக்கிறோம். "வெற்றி கரமாக நடந்தேறின'' என்றால், அடிதடி ஒன்றுமில்லாமல், நடுவில் கலகம் குழப்பம். இவற்றினால் தடைப்படாமல் "வந்தனோபசாரம்'' வரையில் நடந்து முடிந்தது என்று தான் அர்த்தம். அதேமாதிரி, "தீர்மானங்கள் நிறைவேறின'' என்றாலும், அவை ஏகமனதாகவோ பெரும்பாலான வோட்டுக்கள் பெற்றோ மகாநாட்டில் நிறைவேறின என்று தான் அர்த்தமே தவிர, தீர்மானத்தின் விஷயம்



காரியத்தில் நிறைவேறியது என்று அர்த்தமல்ல. நமது சாதாரண அநுபவம் என்னவென்றால், மகாநாடுகள் பாட்டுக்குக் கூடித் தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டியது தான்; காரியங்கள் எப்போதும் போல் நடந்துகொண் டிருக்க வேண்டியதுதான்.

ஆனால் தேவகோட்டை மகாநாட்டில் இந்த வழக்கத் துக்கு நேர் விரோதமாகக் காரியம் நடந்தது. அதாவது மகாநாட்டின் நோக்கம் என்னவோ அது, அங்கேயே, மகாநாட்டுப் பந்தலிலேயே காரியத்தில் நிறைவேறிவிட்டது. அதுவும் முதல் நாள் சாயங்காலமே நடந்துவிட்டது. ஆகவே இந்த மகாநாடு ஆரம்பிக்கும்போதே வெற்றிகரமாக ஆரம்பித்துவிட்டது என்று சொல்லலாம்.

முதல் நாள் மாலை மகாநாட்டுப் பந்தலில் நடை பெற்ற ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் சங்கீதக் கச்சேரி யைத்தான் குறிப்பிடுகிறேன். இந்தக் கச்சேரி மூன்றரை மணி நேரம் நடந்தது. ஆரம்பம் முதல் கடைசிவரையில் எல்லாம் தமிழ்ப்பாட்டுக்கள்தான். தமிழ்ப்பாட்டுக்கள் என்றால் துக்கடாக்கள் அல்ல—டாக்கிப்பாட்டுக்களும் அல்ல. விஸ்தாரமாக, நிரவல்—ஸ்வரங்களுடன் பாடக் கூடிய ஒன்பது தமிழ்க் கீர்த்தனங்கள்; ராகம், பல்லவி; தமிழ்ப்பதம்; பாரதியார் கீதங்கள் முதலியவை.

கச்சேரி எப்படி இருந்தது?

ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மியின் குரலில் உள்ள மோகன சக்தியைப் பற்றி எல்லாரும் அறிந்திருக்கிறோம். "இது மனித கணத்தைச் சேர்ந்த மோகனமல்ல; கந்தர்வ, வித்யாதர கணங்களுக்குரியது'' என்று வியந்திருக்கிறோம். "எம். எஸ். சுப்புலக்ஷ்மி பாட்டே பாடவேண்டியதில்லை; பெருக்கல் வாய்ப்பாட்டைப் பாடினாலும் நாம் கேட்டு அநுபவிக்கலாம்!'' என்று ஒரு பிரமுகர் சொன்னார்.

இத்தகைய இனிய குரலில் எம். எஸ். நமது அற்புத மான கர்நாடக ராகங்களுக்கு உயிரும் உருவமும் கொடுத்து நம் முன்னால் கொண்டுவந்து நிறுத்துகிறார். சுருதியோடு இழைந்து கார்வை கொடுத்துப் படிப்படியாக மேலேறி ராகங்களின் ஜீவ ஸ்வரங்களை கான மழையாகப் பொழியும் சக்தியை அவரிடம் காண்கிறோம்.

இவ்வளவு இனிமையுடனும் வித்வத்துடனும் தமிழும் கலந்துவிட்டால் கேட்க வேண்டுமா?

செட்டிமார் நாட்டின் எல்லா ஊர்களிலிருந்தும் மிக முக்கியமான பிரமுகர்களெல்லாம் இந்தக் கச்சேரிக்கு வந்திருந்தார்கள். அவர்கள் எத்தனையோ சங்கீதக் கச்சேரி களைக் கேட்டு அநுபவித்தவர்கள்; சிலர் ரொம்பவும் உயர்ந்த சங்கீத ஞானமுள்ள ரஸிகர்கள். அவர்கள் எல்லாரும், "இந்த மாதிரி உயர்ந்த கச்சேரி இதுவரை கேட்டதில்லை'' என்ற அபிப்பிராயத்தை ஏகமனதாகத் தெரிவித்தார்கள்

முதற் பகுதியிலெல்லாம் கச்சேரியில் வித்வத் ததும்பிக் கொண்டிருந்தது- விஸ்தாரமான ராக ஆலாபனம், நிரவல், ஸ்வரம் ஒன்றிலும் குறைவில்லை. பிடில் கோவிந்தராஜப் பிள்ளையும் "தமிழ்க் கச்சேரி யாச்சே'' என்று சங்கோசப் படாமல் நாத வெள்ளத்தைப் பொழிந்தார். மிருதங்கம் கிருஷ்ணமூர்த்தி ராவ் பாட்டுக்களை ரொம்பவும் அநுபவித்துக் கொண்டு வெகு அடக்கமாக வாசித்தார். பல்லவி ராகம் முடிந்து பின்பகுதிக்கு வரும்போது, பாட்டு, பக்க வாத்தியம் என்பதெல்லாம் மறந்து போய்விட்டது. தமிழும், இசையும், சபையோரின் உள்ளமும் ஒன்றாய்க் கலந்து விட்டன. கடைசியில், "யாமறிந்த மொழிகளிலே" என்ற பாரதியார் பாட்டைக் கேதார கௌள ராகத்தில் பாடி எடுத்தபோது, பழனியாண்டவருக்குக் காவடி எடுக்கையில்



பக்தர்களுக்கு உண்டாகும் ஆவேசத்தைப்போல், சபையில் பலருக்கு ஆவேசமே உண்டாகிவிட்டது. "தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'' என்பதில் நின்று அபூர்வ சங்கதிகளைப் போட்டுக் குலுக்கியபோது, சபையிலிருந்த ஒவ்வொருவரின் உள்ளத்திலும் "ஆம் ஆம்'' என்ற எதிரொலி உண்டாயிற்று.

கச்சேரி முடிந்ததும், "மகாநாட்டின் நோக்கம் பூரண மாய் வெற்றி அடைந்துவிட்டது'' என்ற எண்ணம் எல்லாருடைய மனதிலும் ஏற்பட்டது.

## ராஜா ஸர் வருத்தம்

மறு நாள் காலையில் மங்களகரமான நாதஸ்வரக் கச்சேரியுடன் மகாநாடு ஆரம்பமாயிற்று. மகாநாட்டுக் காகப் பெரிய பந்தல் போட்டுப் பிரமாதமான ஏற்பாடு செய்திருந்தார்கள். பந்தல் நிறைய ஐயாயிரம் ஜனங்கள் கூடியிருந்தார்கள். "இனிய தமிழில் பாடி இசைக் கலையை வளர்ப்போம்'' என்பது போன்ற அழகிய வாக்கியங்கள் எழுதிய அட்டைகள் மகாநாட்டுப் பந்தலில் எங்கே பார்த்தாலும் தொங்க விடப்பட்டிருந்தன.

வரவேற்புத் தலைவர் ஸ்ரீ குப்பன் செட்டியார் தமது வரவேற்பு உரையைப் படித்தார். "குப்பன் செட்டியார்'' என்றதும் வயதான பெரிய மனுஷரின் உருவம் மனக்கண் முன்னால் வருகிறதல்லவா? உண்மையில், அவர் கதர் அணிந்த ஓர் இளைஞர்; சிறந்த காந்தி பக்தராகக் காணப்பட்டார். ஆனாலும் கொஞ்சங் கூடத் தயங்காமல் செட்டி நாட்டு ராஜா இசைக் கலையை வளர்ப்பதற்காகச் செய்யும் முயற்சியைப் பாராட்டிப் பேசினார்.

பிறகு ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் மகாநாட்டைத் திறந்து வைப்பதற்கு எழுந்தார்; ஓரளவு தமது உள்ளத்தையும் திறந்து காட்டினார். "இயாகராஜ

உற்சவ ஆரம்ப தினத்தில் ஸ்ரீ சத்தியமூர்த்தி சொன்னபடி இந்த அநாவசியமான விவாதம் முடிந்து விடுமென்று எதிர்பார்த்தேன். அப்படி முடியாமல் விவாதம் வளர்ந்து வருவது பற்றி வருந்துகிறேன்'' என்றார். இந்த மாதிரி அவருக்கு வருத்தம் உண்டு பண்ணியவர் செட்டிநாட்டு ராஜாவின் அத்தியந்த நண்பர்களில் ஒருவரான ஸர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்தான்.

கொஞ்ச நாளைக்கு முன்னால் நடந்த தீக்ஷிதர் தினக் கொண்டாட்டத்தில் நமது அல்லாடி தலைமை வகித்தார். "தீக்ஷிதர் கட்சி ரொம்பவும் 'வீக்' ஆகிவிட்டாற் போலிருக்கிறது; அதற்காகத்தான் நம்மைக் கூப்பிட்டிருக்கிறார்கள்'' என்று அவர் எண்ணியிருக்கவேண்டும். தீக்ஷிதருக்கு எதிரி தமிழாகத்தான் இருக்கும் என்றும் அவரே தீர்மானித்துக் கொண்டு, தமிழ்ப்பாட்டு இயக்கத்தைப்பற்றி, அது "அநாகரிக இயக்கம்'' என்றெல்லாம் வெளுத்து வாங்கி விட்டார். அவருடைய கூற்றைப் பாயிண்டு பாயிண்டாக ராஜா ஸர் எடுத்துக்கொண்டு ஆணி அடித்தாற்போல் பதில் சொன்னார். அதைக் கேட்டவர்களுக்கெல்லாம், "நமது பிரசித்தி பெற்ற மாஜி அட்வகேட் ஜெனரல் இவ்வளவு அர்த்தமற்ற வாதங்களைச் சொல்லியிருக்க முடியுமா?'' என்று தோன்றியிருக்கும். "ஸர் அல்லாடியிடம் வேறு என்ன கேஸ் கொடுத்தாலும், சங்கீத சம்பந்தமான கேஸ் மட்டும் கொடுக்கக் கூடாது!'' என்றும் அவர்கள் எண்ணியிருப்பார்கள்.

"நமக்கு வேறு பாஷைப் பாட்டுக்களில் சிறிதும் துவேஷம் கிடையாது; தமிழ்ப் பாட்டுக்களும் வேண்டும் என்று மட்டுந்தான் கேட்கிறோம்'' என்று ராஜா ஸர் வற்புறுத்திச் சொல்லி முடித்தார். பிற பாஷைகளில் தமக்கு துவேஷம் கிடையாதென்பதை அவர் ஸ்ரீ தியாகராஜ உற்சவ நிதிக்கு ரூபாய் ஆயிரம் கொடுத்தும் நிரூபித்திருக்கிறார் என்று அறிகிறேன்.



## டி.கே.சி. பேச்சு

பிறகு, ராஜாஜி அக்கிராசன பீடத்தில் அமர்ந்து ஒன்றரை மணிநேரம் அளவற்ற ஆவேசத்துடன் தமிழ்ப் பாட்டு இயக்கத்தின் சகல அம்சங்களையும் பற்றிச் சாங்கோபாங்கமாய்ப் பேசினார்.

என்ன? ராஜாஜியா பேசினார்!

ஆமாம்; ராஜாஜிதான் பேசினார்; ஆனால் டி.கே.சி. யின் உடம்பிலிருந்து கொண்டு பேசினார்.

[இப்படி நான் சொல்வதற்கு ஆதாரம் ராஜாஜியே தான். "டி.கே.சி. யின் உடம்பில் நானே இருப்பதாகவும், அவர் சொல்வதை யெல்லாம் நான் சொல்வதாகவும் கொள்ள வேண்டியது'' என்று ராஜாஜி அவர்கள் மகா நாட்டுக்குச் செய்தி அனுப்பியிருந்தார்.]

டி.கே.சி. யின் அபிப்பிராயங்கள் எல்லாம் ஏற்கெனவே வெளியாகி யிருப்பவைதான். ஆகையால், அவருடைய பேச்சைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. அவரைப் பற்றியே ஒரு வார்த்தை சொல்கிறேன். அதுவும் 'இந்த பாஷைத் துவேஷம்' விஷயமாகத்தான். டி.கே.சி.க்கும் 'துவேஷம்' என்னும் வார்த்தைக்குமே வெகுதூரம். அவருக்கு ஸம்ஸ்கிருத பாஷையில் ரொம்ப அபிமானமே உண்டு. "வயதாகி விட்டதே; கற்றுக்கொள்ள முடிய வில்லையே!'' என்று வருந்துவார். சென்னையில் நடக்கும் தீக்ஷிதர் தினக் கொண்டாட்டங்களுக்கு வருஷந்தோறும் அவர் தவறாமல் வந்திருக்கிறார். சில பிரமுகர்கள் இம்மாதிரி கூட்டங்களுக்கு வந்து பேச்சு முடிந்ததும் எழுந்து போய்விடுவார்கள். சிலர் வாசலில் 'குரூப் போட்டோ'வில் நின்று விட்டு அந்த வாக்கிலேயே ஸவாரி விட்டு விடுவார்கள்! டி.கே.சி. யோ "விளங்கவில்லை'' என்று சொல்லிக் கொண்டே கடைசி வரையில்

இருப்பார். நேற்றுப் பாட ஆரம்பித்த கற்றுக்குட்டி வித்வான் பாடினாலும் கடைசி வரையில் இருந்து கேட்டு விட்டு, அவரிடம், "நன்றாய்ப் பாடினீர் ஐயா! ஸாவேரி கீர்த்தனம் ரொம்ப பேஷ்!" என்று இப்படி ஏதாவது சொல்லி விட்டுத்தான் போவார். உற்சாகம் ரொம்ப அதிகமாயிருந்தால், "பாட்டிலே பாவமே வந்து விட்டதே!" என்பார்.

### கோதண்டராமன் பசு

ஆகவே, இந்தத் தமிழ்ப் பாட்டு இயக்கத்தில் சேர்ந்த பிரமுகர் எவருக்கும் பிற பாஷைகளின் மீது துவேஷம் இல்லை. "தமிழை துவேஷித்துத் தள்ள வேண்டாம்." என்று மட்டுந்தான் அவர்கள் கேட்டுக் கொள்கிறார்கள். தீக்ஷிதர் தினக் கொண்டாட்டத்தில் ஸர் அல்லாடி பேசும் போது, "பாஷையில் என்ன இருக்கிறது? ஜெர்மன் சங்கீதம், ருஷ்ய சங்கீதம்—எல்லாம் எனக்கு நன்றாய்த் தானிருக்கிறது" என்றார். "ஜெர்மன் பாட்டையும் ருஷ்யாவின் பாட்டையும் கேட்பேன்; தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் எது வேணுமானாலும் கேட்பேன்; தமிழ்ப் பாட்டு மட்டுந்தான் கூடாது" என்று சொன்னால், அது கோதண்டராமன் பசுவை ஞாபகப் படுத்துகிறதல்லவா?

ஒருவர் தம் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து இராமாயண பாராயணம் செய்வது வழக்கம். ஒரு நாள் பாராயணம் செய்து கொண்டே வாசலில் உலர்த்தி யிருந்த நெல்லையும் பார்த்துக் கொண்டிருந்தார். பாராயணம் முடிந்து, மங்கள சுலோகம் சொல்லிக் கொண்டிருக் கிறார்:—

**"ஸ்வஸ்திப்ர ஜாப்யஃ பரிபாலயந்தாம்**
**ந்யாயேன மார்க்கேண மஹீம்மஹீசா**
**கோப்ராம்மணேப்ய சுபமஸ்து நித்யம்..."**



என்பது வரையில் சொன்னார். "லோகாஸ் ஸமஸ்தாஸ் ஸுகினோபவந்து" என்னும் கடைசி வரி பாக்கி. இந்த நிலையில், வீட்டு வாசலில் உலர்த்தியிருந்த நெல்லை அடுத்த வீட்டுக் கோதண்டராமனுடைய பசு வந்து தின்றது அவர் கண்ணில் விழுந்து விட்டது.

**"கோப்ராம்மணேப்ய சுபமஸ்து நித்யம்**
**கோதண்டராமன் பசு நீங்கலாக!"**

என்று சுலோகத்தை முடித்துவிட்டு, ஒரு தடியைத் தூக்கிக் கொண்டு போய்ப் போட்டார் ஓங்கி ஒரு அடி!

தமிழை இந்தக் கோதண்டராமன் பசுவைப் போல் நடத்தக்கூடாது என்பதுதான் கோரிக்கை. அதிலும் தமிழ்ப் பசு பிறத்தியார் வீட்டு நெல்லைத் தின்கிறதில்லை யல்லவா? தமிழ்ப் பசுவின் நெல்லைத்தானே மற்ற ஊர்ப் பசுக்களெல்லாம் வந்து தின்று கொண்டிருக்கின்றன?

### சிதம்பரம் தீர்மானம்

"துவேஷம் இல்லை என்கிறீரே? சிதம்பரம் மகாநாட்டுத் தீர்மானத்தைப்பற்றி என்ன?" என்று கேட்கலாம். சாதாரணமாக மகாநாட்டுத் தீர்மானங்களைப் பற்றி எனக் கேற்பட்டிருந்த அலட்சிய புத்தியினால், சிதம்பரம் தீர்மானங்களைப் பற்றி நான் முதலில் கவனிக்க வேயில்லை. அப்புறம் அநேகர் அடிக்கடி அதைப்பற்றிப் பயங்கரமான குரலில் பேசிய பிறகு சிதம்பரம் தீர்மானம் ரொம்ப ரொம்ப அக்கிரமமாய்த்தானிருக்க வேண்டு மென்று தோன்றியது. டி.கே.சி. அவர்களையே பிடித்து, "அந்த அக்கிரமத் தீர்மானத்தை ஒரு வார்த்தை தவறாமல் சொல்லுங்கள்" என்றேன்.

அந்த அசல் தீர்மானம் இதுதான்:—

**"தமிழ் நாட்டில் தமிழர்களுக்காக நடக்கும் சங்கீதக் கச்சேரிகளில் தமிழ்ப் பாட்டுக்களுக்கு முக்கியமும் கௌரவ மும் கொடுத்துப் பாடச் செய்ய வேண்டுமென்று சங்கீத சபைகளையும் அவைகளை ஆதரிப்பவர்களையும் கேட்டுக் கொள்ளலாயிற்று."**

இவ்வளவுதான் விஷயம்! மற்ற பாஷைப் பாட்டுக்களை விலக்கச் சொல்லவில்லை; தமிழ்ப் பாட்டுக் கள் மட்டுமே பாடவேண்டுமென்று கேட்கவில்லை; **பெரும்பாலும் தமிழ்ப் பாட்டுக்கள் பாடவேண்டும் என்று கூடக் கேட்கவில்லை!** தமிழ்ப் பாட்டுக்கள் எவ்வளவு, மற்ற பாஷைப் பாட்டுக்கள் எவ்வளவு என்பதையெல்லாம் சங்கீத வித்வான்களுக்கே தீர்மானிக்கும் பொறுப்பை விட்டிருக்கிறது. அவர்களை எவ்விதமான நிர்ப்பந்தத் துக்கும் உள்ளாக்கவில்லை. தமிழுக்கு முக்கியமும் கௌரவமும் கொடுத்துப் பாட வேண்டுமென்றுதான் கேட்கிறது. அதாவது, "தமிழ்ப் பாட்டு என்றால் கச்சேரியின் முடிவில் துக்கடா ரகத்தில் சேர்த்துப் பாடுகிறார்களே, அம்மாதிரி செய்ய வேண்டாம்; முதலிலேயே தமிழ்க் கீர்த்தனங்களையும் சேர்த்துக் கொண்டு பாட வேண்டும்" என்றுதான் கேட்டுக்கொள் கிறது. இதுவும், தமிழ் நாட்டில் தமிழர்களுக்காக நடக்கும் கச்சேரிகளில்தான்.

**மேலே குறிப்பிட்ட சிதம்பரம் மகாநாட்டுத் தீர்மானத் தையேதான் தேவகோட்டைத் தமிழிசை மகாநாடும் ஊர்ஜிதம் செய்து நிறைவேற்றி யிருக்கிறது.**

இதில் யாரும் எவ்வித ஆட்சேபமும் சொல்வதற்கு இடம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. "தமிழைக் கௌரவிக்க மாட்டோம்" என்று தமிழ் நாட்டில் யாராவது சொன்னால், அது இயற்கைக்கே மாறுபாடான விஷயமா யிருக்கும்.



"தீர்மானம் இவ்வளவுதானே சொல்கிறது? அப்படி யானால் தனித் தமிழ்க்கச்சேரிகள் என்னத்திற்கு?" என்று கேட்கலாம். "இது பிரசாரத்திற்காகவும், புதிய புதிய தமிழ்க் கீர்த்தனங்களை வெளியில் கொண்டுவருவதற் காகவுந்தான்" என்று முன்னமே சொல்லியிருக்கிறது. தீக்ஷிதர் கொண்டாட்டத்தின்போது மூன்று நாளும் தீக்ஷிதர் கிருதிகளையே எல்லாரும் பாடினால் அதை யாராவது ஆட்சேபிக்கிறார்களா? ஸ்வாதித் திருநாள் கீர்த்தனங்களையே தனியாக ரேடியோவில் பாடினால் யாரேனும் ஏன் என்று கேட்கிறார்களா? அப்படியிருக்க, தமிழ் ஸாஹித்ய கர்த்தாக்கள் எல்லாருக்கும் சேர்த்துச் சில சமயங்களில் அத்தகைய கௌரவத்தைக் கொடுக்கக் கூடாதா? "கூடாது" என்றால், மறுபடியும் கோதண்ட ராமன் பசுமட்டும் என்ன பாவம் செய்தது என்றுதான் கேட்கவேண்டும்.

* * * *

தேவகோட்டை மகாநாடு சம்பந்தமாக இன்னும் எவ்வளவோ வைபவங்கள் நடந்தன. நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை அருமையான கருத்துக்களும் நகைச்சுவையும் ததும்பிய பாடல்களைப் பாடிக் காட்டினார். மதுரை மணியும், திருச்சி சகோதரர்களும் உயர்ந்த கச்சேரி பாணியில் தமிழ்ப்பாட்டுக்களைப் பாடினார்கள். 'தாளச் சிலம்ப வித்தைகளுக்கு தமிழ்ப் பாட்டுக்களும் தாராளமாக இடம் கொடுக்கும்" என்பதை சித்தூர் சுப்பிரமண்யப் பிள்ளை கடம், மோர்சிங், மிருதங்கம், கஞ்சிரா, மருங்காபுரி பிடில் இவ்வளவுடனும் நிரூபித்துக் காட்டினார். ஸ்ரீ மாரியப்ப சுவாமிகள் தமது சொந்த தமிழ் ஸாஹித்தியங்களை உள்ளுருகி, ஊனுருகிப் பாடினார். பனையப்பட்டி ஸ்ரீ வினைதீர்த்தான் செட்டியார்—ஆஹா! பலே! —அரை மணி நேரத்தில் நாலுமணிக் கச்சேரியை— தானம் உள்படப்—பாடித் தீர்த்துவிட்டார்!

நான் ரயிலுக்குக் கிளம்பிய பிறகு ஸ்ரீ தண்டபாணி தேசிகர் பாடியிருப்பார். மறுநாள் எவ்வளவோ இசை விருந்துகளும் பேச்சு விருந்துகளும் காத்திருந்தன. ஸ்ரீமதி சரஸ்வதிபாய் அம்மாள் பேசியும் பாடியும் இருப்பார். ஸ்ரீ தியாகராஜ பாகவதர் இன்னிசையைப் பொழிந்திருப்பார். இவையெல்லாம் கேட்க எனக்குத்தான் கொடுத்து வைக்கவில்லை. மொத்தத்தில், தேவகோட்டை மகாநாடு மிகவும் பிரயோஜனமாகவும், பூரண வெற்றியுடனும் நடந்திருக்கிறது. இதை இவ்வளவு ஊக்கத்துடன் உற்சாகத்துடனும் நடத்திய செட்டிநாட்டின் தேசிய இளைஞர்களை எவ்வளவு பாராட்டினாலும் போதாது.



# அரியக்குடியும் தமிழும்

எனக்கு வந்த கடிதங்களில் ஒன்று வருமாறு:

"அரியக்குடியார் தமிழ் இசைக்கு இவ்வளவு எதிர்ப்பாய் இருப்பதன் மர்மம் என்ன? எதற்காகப் 'பாகிஸ்தான்' கொள்கையை (சங்கீதத்தில்) கொண்டு வந்து விடுகிறார்?—தங்களுக்கு இதன் ரகசியம் தெரிந்திருந்தால், தயவு செய்து சொல்லவும்"

மேற்படி கடிதத்தில் கேட்டிருக்கும் இரகசியத்தை உடைத்து விடுவதுதான் உசிதம்.

பார்க்கப் போனால், உடைத்து விடுவதற்கு இரகசியம் ஒன்றும் இருப்பதாகவே தெரியவில்லை.

அரியக்குடி இராமானுஜய்யங்கார் உண்மையில் தமிழிசை இயக்கத்துக்கு எதிர்ப்பா யிருக்கிறாரா? அப்படி யிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. 'பாகிஸ்தான்' கொள்கை என்று நண்பர் குறிப்பிடுவது எதை என்று நேயர்களில் பலருக்குத் தெரிந்திராது. ஸ்ரீ ராமானுஜய்யங்கார் சமீபத்தில் தமிழ்ப் பாட்டுப் பாடுவதின் சம்பந்தமாகத் தமது கருத்தை வெளியிட்டிருக்கிறார். சங்கீதக் கச்சேரிகளில் பாடும் உருப்படிகளில் பாதி தமிழ்ப் பாட்டாயப் பாடுவதற்கு ஐயங்கார் தமது சம்மதத்தைத் தெரிவித்திருக்கிறார். அதாவது, இவ்விதம் பத்திரிகைகளில் வெளியாகி யிருக்கிறது. இது உண்மையானால், தமிழிசை இயக்கத்தை ஐயங்கார் எதிர்க்கிறார் என்பதாக நாம் சொல்வதற்கு இல்லை. அந்த இயக்கத்துக்குப் பெரும் ஆதரவு கொடுக்கிறார் என்றே சொல்ல வேண்டும்.

இன்னும் பார்க்கப்போனால், தமிழிசை இயக்கத்துக்கு இது ஒரு சிறந்த வெற்றி யென்றே நான் சொல்லத் தயாரா யிருக்கிறேன்.

நேற்று வரை, எத்தனையோ சங்கீதக் கச்சேரிகளை ஐயங்கார் ஒரு தமிழ்ப் பாட்டுக் கூடப் பாடாமல் முடித்திருக்கிறார்; நான் கேட்டிருக்கிறேன். இன்னும் அநேக கச்சேரிகளைக் கடைசியில் இரண்டொரு தமிழ்த் துக்கடாக்கள் மட்டும் பாடி முடித்திருக்கிறார். ஐயங்கார் மட்டும் அல்ல; அநேகமாய்ப் பெரிய வித்வான்களின் கச்சேரியெல்லாம் வெகு காலமாக இப்படித்தான் இருந்து வந்தது. சில வருஷங்களுக்கு முன்னால், முசிரி சுப்ரமணிய ஐயர் பல்லவிக்கு முன்னால் ஒரு தமிழ்க் கீர்த்தனம் பாடி விட்டாரென்று நாமெல்லாம் பரமானந்த மடைந்தோம்!

அந்த நாளெல்லாம் போய், இப்போது அரியக் குடியார் கச்சேரியில் பாதி உருப்படிகள் தமிழில் பாட முன் வந்திருக்கிறாரென்றால், அது பெரிய புரட்சிகரமான மாறுதல் என்றே எனக்குப்படுகிறது. இம்மாதிரி அரியக்குடி சொன்னதுடன் நிற்காமல், காரியத்திலும் செய்து காட்ட வேண்டுமேயென்று மட்டுந்தான் கவலைப்படுகிறேன்.

அரியக்குடியார் பாதி தமிழ்ப் பாட்டுப் பாடுவதாக முன் வந்திருப்பதில் இன்னொரு விசேஷம் இருக்கிறது. "சங்கீதத்துக்கு வார்த்தைகளே பிரதானமில்லை—அர்த்தம் தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை'' என்று கருதுகிற கோஷ்டியைச் சேர்ந்தவர் அவர். சங்கீத வித்வான்கள்—ரஸிகர்களுக்குள் இம்மாதிரி பெரிய கோஷ்டி ஒன்று இருக்கத்தான் செய்கிறது. தாளக் கட்டுடன் சங்கதிகளை நிறையப் போட்டுப் பாடுவதற்கு அநுகுணமாயிருப்பது தான் உயர்ந்த சாஹித்யம் என்பது இவர்கள் அபிப்பிராயம். ஆகையினால்தான், ஐயங்கார்வாள் எந்த பாஷையில் பாடினாலும், வார்த்தைகளைப்பற்றி அதிக மாகக் கவனிப்பதில்லை. இத்தகைய அபிப்பிராயமுடைய



வர், "பாதி தமிழ் உருப்படிகள் பாடுகிறேன்'' என்றால், இது விஷயத்தில் பொதுஜன அபிப்பிராயத்தை மதித்துத் தான் அவ்வளவு தூரம் அவர் ஒப்புக்கொண்டிருக்க வேண்டும். இது மகிழ்ச்சிக்குரிய விஷயமல்லவா?

இதற்கு மேலேயும் அவர் சென்று தமிழ்ப் பாட்டுக் களைப் பாதிக்கு அதிகமாகப் பாடுவது, கச்சேரிகளுக்குப் போகும் ரஸிகர்களையே இனிமேல் பொறுத்திருக்கிறது. தமிழ்ப் பாட்டுக்களையே சபையோர் அதிகம் ரஸித்து அநுபவிக்கிறார்கள் என்பதை ஐயங்கார் காணும்போது தமிழிசையில் அவருடைய உற்சாகமும் வளரத்தான் செய்யும். அப்போது 'சங்கீத பாகிஸ்தான்' கொள்கையும் போய்விடும்.

தற்சமயம் ஐயங்காரைப் போன்ற வித்வான்கள் 'பாகிஸ்தான்' கொள்கையை அவலம்பிப்பதற்கு ஒரு முக்கியக் காரணம் உண்டு. தியாகய்யர், தீக்ஷிதர், சாமா சாஸ்திரிகளின் சாஹித்யங்களில் நமது வித்வான்களுக் குள்ள மதிப்பும் பக்தியுந்தான் அக்காரணம். அதோடு, ஐயங்கார் அவர்களின் குருவான 'பூச்சி' சீனிவாச ஐயங்காரும் தெலுங்கிலேதான் சாஹித்யம் செய்திருக் கிறார். மேற்படியார்களுடைய கீர்த்தனங்களுக்கெல்லாம் கச்சேரிகளில் அடியோடு இடம் இல்லாமல் போய் விடுமோ என்று ஐயங்கார் போன்றவர்கள் பயப்படுவதாக தெரிகிறது.

ஆனால், தமிழ் மக்கள் அவ்வளவு குறுகிய நோக்கம் கொண்டவர்களல்ல என்பது பிரசித்தியான விஷயம். டாக்டர் டாகூர் வங்காளியில்தான் கவிதைகள் செய்தார்; அவரிடம் தமிழர்கள் காட்டிய பக்திக்கும் மரியாதைக்கும் அளவுண்டா? ஆகவே, கர்நாடக சங்கீதத்துக்குத் தொண்டு செய்திருக்கும் எல்லா சாஹித்திய கர்த்தாக்களும்—புரந்தர தாஸர், தீக்ஷிதர், தியாகய்யர், சாமா சாஸ்திரிகள்—ஆகிய வர்களுக்கெல்லாம் மரியாதை செய்யவும், அவர்களுடைய

சாஹித்யங்களை வளர்க்கவும் தமிழ் நாட்டார் எப்போதும் சித்தமா யிருப்பார்கள். மிகப் பெரும்பாலான தமிழ்நாட்டு சங்கீதக் கச்சேரிகளில் இதுவரை தமிழையே ஒதுக்கி வைத்து வந்திருப்பதனால்தான் தமிழிசை இயக்கத்துக்கும் தமிழ்ப் பாட்டுக் கிளர்ச்சிக்கும் அவசியம் ஏற்பட்டது என்பதை மறந்து விடக்கூடாது. தமிழ்ப் பாட்டுக்களுக்கு நமது கச்சேரிகளில் உரிய கௌரவ ஸ்தானம் கிடைக்கும் போது, இத்தகைய கிளர்ச்சிக்கும் அவசியமில்லாமல் போய்விடும்.

எனக்கென்னமோ, அரியக்குடி ஸ்ரீராமானுஜய்யங்கார் அவர்களிடம் பூரண நம்பிக்கை இருக்கிறது. வைஷ்ணவத்தின் ஆதி குருக்களான ஆழ்வாராதிகளின் தமிழன்பு அவர் இருதயத்திலும் இடம் பெற்றுத்தானிருக்கும். அத்துடன் அவர் தமிழிலே ஸாகித்யம் பார்த்திருக்கிறார் என்பதாகக் கேள்விப்படுகிறேன். அவர் மனது வைத்தால் எவ்வளவோ பழைய தமிழ்ப் பாட்டுக்களுக்கும், புதிய தமிழ்ப் பாட்டுக் களுக்கும், மெட்டுப்போட்டு மெருகு கொடுத்துக் கச்சேரி களில் பாடுவதற்குத் தகுதியாக்கலாம்.

